1309

தொகுதி 9.] 1930ஞு ஆகஸ்டுமீ 1வ [பகுதி 7.

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி குப்புசாமி முதலியார்



...சொந்தக்காரர்
...சாமி முதலியார்,
...ப்பம், சென்னை.

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஆம் பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்குமுன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கோலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம் பாகம் என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி ரகசியம் 4-ம்பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும் ; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்டவிலாசத்திற்கு உடனே எழுதி வி-பியிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கோலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

"நாங்கள் இந்த அறைக்குள் இருக்கும் சில போலீஸ் புத்தகங்களுக்குக் காவலா யிருக்கிறோம். தன்னைவிட சாமார்த்தியவான் யாருமில்லை யென்று கருதிக்கொண்டிருக்கும் எவனோ ஒரு கள்ளப்பயல் இன்றிரவு அவைகளைக் களவாடிக்கொண்டு போவதாய்த் தீர்மானித்திருக்கிறானும். ஆனால் உன்னைப்போன்ற யோக்கியமான பெரிய மனிதன் அத்தகைய இழிவான காரியத்தை நாடி இங்கு வந்திருப்பாய் என்று நான் நினைக்கவில்லை" என்றான். உடனே மூவரும் கலகலவென்று நகைத்தார்கள்.

ஆகா! எனக்கு அப்போது மனம் எப்படி யிருந்தது தெரியுமா? உடனே யவனைக் கொன்றுவிடலாமா வென்றிருந்தது. அப்படிச் செய்ய முயன்றால் வீண் தொந்திரவாய் முடியும் என்று பல்லைக் கடித்துக்கொண் டிருந்தேன். நாம் காட்டிக் கொடுக்கப்பட்டோம், மோசம் போய்விட்டோம் என்று எனக்கு நன்றாய் விளங்கிவிட்டது. இனி அந்த விடத்தைவிட்டுத் தப்பித்துக்கொண்டு வெளி வந்து விட்டால் போதும் என்று இருந்தது. அதன்மேல் அவர்கள் பேச்சுகளை யெல்லாம் நானும் வேடிக்கையாய்க் கருதுபவன்போல் அபிநயித்துக்கொண்டு சரி இனி நான் போய் வருகிறேன் என்றேன். அவர்கள் சற்றும் தடை செய்யாததைக் கண்டு உடனே புறப்பட்டு அவ்வீட்டை விட்டு வெளிப்பட்டேன். பெரும்பாலும் வழியில் நான் கைது செய்யப் படுவேனென்றும் அல்லது இங்கு வந்ததும் கைது செய்யப் படுவேனென்றும் எண்ணினேன். இதுகாறும் பெரும்பாலும் நீங்களெல்லாம் கைதுசெய்யப்பட் டிருப்பீர்களென்றும் இவ்வீடு போலீஸார் வசத்திலிருக்குமென்றும் மனதில் பெருங் கலவரமாயிருந்தது. அது சமயம் செல்வநாதன் கடையில் இவ்விஷயத்தைக் கேட்டால் இச்

186548

சமயம் விட்டுவிட்டாலும் விடுவானென்று ஒரு யோசனையும் எனக்குள்ளிருந்தது. கடைசியில் எப்படியானுலு மாகட்டும். நேராய் இங்கு வருவதே சரி என்று தீர்மானித்துக் கொண்டு வந்துவிட்டேன். ஆனுல் ஒரு விஷயம் மட்டும் என் மனதில் நன்ருய்ப் பட்டுவிட்டது. அதாவது நீலாள் நம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டாள் என்பதே.

பொன்னன்:—"ஆகா அதற்குச் சற்றும் சந்தேகமே யில்லை. இப்போது என்ன செய்வது?" என்ருன்.

தானப்பன்:—"ஏன்? நாமெல்லாம் அதற்காகத் தூக்கிற் போடப்படுவதாயினும் சரி. அவளைச் சரிப்படுத்தி விட வேண்டியதே" யென்று கண்களில் கோபத் தணல் வீசக் கூறினுன்.

ஜாலக்காரன்:—"ஆம். அவள் அங்கிருந்து நமக்குச் சிக்கினுல்....அவள் எங்காவது ஓடிவிட் டிருப்பாளென்றே நான் நம்புகிறேன்" என்ருன்.

தானப்:—"அந்த நீலாளைப்பற்றி யெனக்குத் தெரிகிற அவ்வளவில் கால் பங்குகூட உனக்கு இன்னம் தெரியாது. அவள் அப்படி யோடிப்போகும் கோழையல்ல. தைரியமாய் நின்று எதையும் மறுதலிப்பாள். அதோடு நீ கூறிய இன்னெரு விஷயத்தைக் கவனிக்கவில்லை போலும். அதாவது அவள் ஒன்றும் வெளியிடவில்லை யென்று அர்த்தப்படும்படி செல்வநாதன் கூறினுனென்று சொன்னதை மறந்துவிட்டாயோ" வென்ருன்.

ஜாலக்:—ஆம். அவை யாவும் நானறிவேன். அது அவன் தந்திரம். மற்ற சங்கதி யொருபக்க மிருப்பினும் ஸர்தார் சூரியநாயகன் வீட்டில் தீப்பற்றிய சங்கதியின்

இரகசியம் அவள் கூறியிருந்தாலன்றி செல்வநாயக னுக்குத் தெரிந்தேயிராது. ஆகையால் இந்த விஷயத் தையும் அவளே கூறி யிருக்க வேண்டும்.

தானப்:—"அவை யாவும் நான் நன்கறிவேன். நான் கூறுவ தென்னவெனில் நீலாள் நம்மைக் காட்டிக்கொடுத்தது உண்மையே. செல்வநாதன் அந்த சங்கதியை நம் மிடம் கூறுவதில்லையென்று அவளுக்கு வாக்களித் திருப்பதும் உண்மையே. இதனுற்றான் அவன் நம்மை யிச்சமயம் சிறை செய்யாமல் விட்டிருக்கிறான். அவன் அவ்வாறு அவளுக்கு வாக்களித்த வரையில் அவள் தைரியமாய் நின்று மறுத்துக் கூறுவாள். அவள் எங் கும் ஓடிவிடவில்லை. அவ்வாறு அவள் கருதவேமாட் டாள். பாப்பம்மாள் வீட்டிலேயே யிருக்கிறாளென்று நான் பந்தயம் கட்டுவேன்" என்றான்.

ஜாலக்:—அப்படியாயின் நான் உடனே சென்று அவள் அங்கிருக்கிறாளாவென்று பார்க்கிறேன். நான் அவளை யிங்கு அழைத்துவரப் பார்க்கிறேன். ஒரு சமயம் அவள் வரமாட்டேனென்றால் என்னசெய்வது?

தானப்:—"என்ன செய்வதா? உடனே மண்டைமே லொரேயடி கொடுத்து வேலையை முடித்துவிட்டு எங் காவது அறுத்துக்கொள்ள வேண்டியதே" என்றான்.

ஜாலக்காரன் "சரி" என்று உடனே அதை விட்டுப் புறப்பட்டான்.

81 - வது அத்தியாயம்

ஜாலக்காரன் பாப்பம்மாள் வீட்டிற்குச் சென்ற போது இரவு ஒருமணி யாயிற்று. அச்சமயம் நீலாளும் இன்னும் மூன்று மாதர்களும் ஒரு அறையில் உட்கார்ந்து குடித்துக்கொண்டும் சிற்றுண்டிகள் அருந்திக் கொண்டு மிருந்தார்கள். நீலாள் ஜாலக்காரனைக் கண்டதும் மிக்க ஆவலோடு சங்கதி யெப்படி முடிந்தது என்று கேட்பவள்போல் குறிப்பாய் அவனை நோக்கினுள். உண்மையில் அவள் இச்சந்தர்ப்பத்தில் இவர்களுக்குத் துரோகம் செய்ய வில்லை. ஆதலால் விரோதமாய் ஏதேனும் நடந்திருக்குமென்று அவள் நினைக்கக் காரணமில்லை. அதனுல் ஜாலக்காரன் குரோதத்தோடு வந்திருப்பானென்று அவள் கிஞ்சித்தும் கருதவே யில்லை.

ஆனுல் ஜாலக்காரனே அவள் தன்னை யேமாற்ற இம்மாதிரி சற்றேனும் வஞ்ச எண்ணமாவது சந்தேகமாவது இல்லாதவள்போல் அபிநயிக்கிருள் என்று கருதிக்கொண்டு அறையை விட்டு வாவென்று அவளுக்குச் சமிக்கை காட்டினுன்.

நீலாள் சந்தேகிக்க ஒரு காரணமுமில்லை. ஆதலால் ஜாலக்காரன் இரகசியமாய்த் தன்னிடம் நடந்த சங்கதியைக் கூறத் தன்னை யழைக்கிறுன் என்று கருதி பேசாமல் எழுந்து சென்றுள். இவர்களிருவரும் அந்த அறையை விட்டுத் தாழ்வாரத்தின் வழியாய் வேறொரு அறைக்குச் செல்லும் போது வழியில் பாப்பம்மாள் எதிரில் வந்தாள். அச்சமயம் அவளும் நன்றுகக் குடித்திருக்கிறுள். நீலாள் அவளைக் கண்டதும் ஜாலக்காரனை நோக்கி "இக்கிழவி இன்று நன்றுய்க்

குடித்திருக்கிருள்; அவளுக்கின்று விடுமுறை நாள்'' என்ருள்.

ஜாலக்காரன் "ஆம் ஆம். தெரிகிறது. அவள் தன் விடுமுறை நாளை நன்ருய்ச் செலவழித்திருக்கிருள் என்று நன்ருய்த் தெரிகிறது'' என்ருன்.

நீலாள்:—"கிழ வேசி இவற்றிலெல்லாம் மிக்க கெட்டிக்காரி வேசி'' யென்ருள்.

இம்மொழிகளைக் கேட்டதே கிழவி மிக்க கோபமடைந்து "ஆ! என்னையா வைகிருய்! ஆயினும் பாவாயில்லை. இருக்கட்டும்'' என்ருள்.

நீலாள்:—"ஏ கிழக்கள்ளி! என்ன முணமுணத்துக்கொண்டிருக்கிருய்'' என்ருள்.

கிழவி தாழ்ந்த குரலோடு "உனக்குத் தெரியவரும். சீக்கிரமாகவே தெரியும்'' என்று கூறிக்கொண்டாள்.

நீலாள் மிக்க அசட்டையாய் சீசீ கிழநாறி யென்று கூறிவிட்டு வெறுப்போடு சென்ருள்.

இருவரும் சற்று அப்புறம் சென்றதே நீலாள் ஜாலக்காரனை நோக்கி "என்ன சங்கதி?'' என்ருள். ஜாலக்காரன் "பேசாமல் வா; நமது கறுப்பறைக்குச் சென்றபின் யாவும் கூறுகிறேன்'' என்ருன். நீலாள் மனதில் இச்சந்தர்ப்பத்தில் ஒரு சூதும் இல்லாதபடியால் அவள் ஏதாவது வஞ்சம் நடக்குமென்று கருத ஒரு காரணமுமில்லை. ஆகையால் ஜாலக்காரனை நோக்கி,

"என்ன? நான் கறுப்பறைக்கு வரவேண்டுமா?'' என்ருள்.

ஜாலக்:—இப்போதொன்றும் கேட்காதே. அங்குபோய்ச் சேர்ந்த பிறகு யாவு மறிவாய்'' என்ருன்.

அவன் கூறிய மாதிரியால் அவன் வார்த்தைகளில் ஏதோ பயங்கரக்குறி யிருப்பதுபோல் தோன்றியது. ஆயினும் முன் ஏற்பாட்டின்படி அவர்கள் இதுகாறும் செல்வநாதனைக் கொலைபுரிந்துவிட் டிருக்கவேண்டும். அத்தகைய பயங்கரச் செய்கையைச் செய்திருப்பதால் இவன் இம்மாதிரி இங்கு அதைப்பற்றிப் பேசவும் பயப்படுகிறான் என்று நீலாள் எண்ணிக்கொண்டாள்.

இருவரும் அங்கிருந்து புறப்பட்டு கறுப்பறைக்கு வந்து சேர்ந்தார்கள். உள்ளே நுழைந்ததும் ஜாலக்காரனை அங்கிருந்த தானப்பன் முதலிய கள்ளர்கள் சமிக்கையாய்ப் பார்த்த பார்வையாலும் அவர்கள் முகக் குறியாலும் "ஓகோ! ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது. நமக்கு என்னமோ தீங்குசெய்ய இவர்கள் கருதி யிருக்கிறார்கள்" என்று அவள் மனதிற்றோன்றியது. ஆயினும் அவள் மனதில் இச் சந்தர்ப்பத்தில் சற்றும் களங்கமில்லை யாதலால் இவர்கள் தனக்குப் பெரிய தீங்கு ஏதேனும் செய்வார்களென்று அவள் கருதவில்லை. எதுவா யிருந்தாலும் நடந்த சங்கதி யென்னவென் றறிவோமெனத் துணிந்து,

"இன்றைய விவகாரம் எப்படி முடிந்ததென்று இப்போதேனும் கூறுகிறீர்களா?" என்றாள்.

தானப்பன் அடக்கமுடியாத கோபாவேசத்தோடு நீலாளை நோக்கி,

"அதை நீயே கூறவேண்டும். செல்வநாதன் இந்த விஷயத்திற்காக உனக்கு எவ்வளவு பணம் கொடுத்தான் என்று நீயே கூறவேண்டும்" என்றான். பக்கிரி பொன்னன் கொலைபாதகப் பார்வையோடு அவளை நோக்கி "ஆம் எவ்வளவு பணம் கொடுத்தான்?" என்று உறுமினான்.

நீலாள் "நான் சத்தியமாய் நிரபராதி" என்றாள்.

தானப்:—"நீ கூறுவது அடியோடு பொய்; உன் ஜாலவித்தைகளை யெல்லாம் நான் நன்கறிவேன்" என்றான்.

அச்சமயம் தானப்பன் சட்டென்று தன் ஜேபியிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்து நீலாள் முன் காட்டி "இதோ பார்; நீ ஸர்தார் சூரியநாயகனுக்கு அன்றிரவு இரகசியமாய் எழுதிய கடிதம்" என்றான். மேற்படி ஸர்தார் வீட்டில் தீப்பற்றிய தினம் கள்ளர் வருவதைப்பற்றி நீலாள் இரகசியமாய் ஒரு கடிதம் எழுதிய விஷயம் நேயர்கள் அறிந்தே யிருக்கிறீர்கள்.

அக்கடிதம் பின்னால் ஜாலக்காரன் கையில் சிக்கிக் கொண்டது நீலாளுக்குத் தெரியாது. ஆகையால் அவள் உடனே பேரிடி விழுந்தவள்போலானாள். அவளுக் கொரு வித பிரமை யுண்டாய்விட்டது. ஓகோ இவர்கள் நம் முயிரை வாங்கிவிடத் தீர்மானித்துவிட்டார்கள். நமது ஆயுள் முடிவிற்கு வந்துவிட்டது என்று எண்ணிக்கொண்டாள். அதோடு செல்வநாதன் விஷயமாய் அவள் கள்ளர்க்குச் சற்றும் வஞ்சகமாவது துரோகமாவது செய்யாமல் சத்தியமாகவே நடந்து கொண்டவளாதலால் தன்மேல் இத்தகைய அபாண்டம் சுமத்தப்படவே அவள் கலவரமடைந்து திகைத்து, பேசவும் தைரியமின்றி தடுமாற்ற மடைந்தாள்.

அச்சண்டாளர்களோ அவள் துரோகம் செய்து சிக்கிக் கொண்டதால்தான் இவ்விதத் தடுமாற்றமடைந்தாள் என்று எண்ணிக்கொண்டார்கள். யாவரும் ஒரே குரலாய் "ஆ! ஆ! பார்த்தாயா பார்த்தாயா! இவள் துரோகம் செய்தவளே" என்று கூவினார்கள். அதே சமயம் ஜாலக்காரன் மிக்க கோபவேசங் கொண்டு தன்னிட மிருந்த ஒரு பட்டுக்குட்டையை யவள் கழுத்தில் மாலைபோல் போட்டு கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு ஒரு கரத்தால் அவள் கூச்ச

விடாதபடி அவள் வாயை அழுத்தி மூடிக்கொண்டான். மற்றத் துஷ்டர்களும், ஆட்டுக் குட்டிமேல் வேட்டை நாய்கள் பாய்வதுபோல் பாய்ந்தார்கள். ஒருவன் அவள் கைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான். ஒருவன் அவள் அசையா வண்ணம் பிடித்துக்கொண்டான். ஒருவன் அவள் கழுத்திலிருந்த குட்டையின் இருமுனைகளையும் பிடித்து முறுக்கி அவள் சுவாசம் விடாதபடிச் செய்தான். இவ்வாறு அச்சண்டாளர்கள் சற்றேனும் இரக்கமின்றி ஸ்திரீ ஹத்தியென்பதையும் சிந்தியாது அவளைக் கொலை செய்து விட்டார்கள்.

சற்றுநேரங் கழித்து தானப்பனும் பக்கிரி பொன்னனும் சவத்தை மாடியின் பின்பக்க மிருக்கும் தாழ்வாரத்திற்குக் கொண்டுபோய் அங்கிருந்து பின்னுலிருக்கும் சேறும் நீரும் நிறைந்த அகழியில் மெதுவாய் இறக்கிவிட்டார்கள். அச்சமயம் சந்திரன் இவர்கள் துர்ச்செய்கைக்குச் சாட்சியா யிருப்பவன்போல் நன்ருய்ப் பிரகாசித்துக்கொண் டிருந்தான். ஆகையால் கள்ளர்கள் மிக்க எச்சரிக்கையோடு நாற்புறங்களிலும் பார்த்து ஒருவரு மில்லையென்று தெரிந்த பிறகே தங்கள் கடைசி வேலையைச் செய்தார்கள்.

நேயர்களே துஷ்டர்கள் தங்கள் தொழிலில் எவ்வளவு சாமார்த்திய தந்திரங்களைக் காட்டினாலும் கடைசியில் அவர்கள் அறிவென்னமோ குறைவே. ஏனெனில் அதில் பரிசுத்தமான பிரகாசமில்லை. அன்றைய தினமே செல்வநாதன் தங்கள் சதியாலோசனைக்குத் தப்பிப்போ யிருக்கிறுன். மேலும் நீலாள் அவனுக்கு உண்மையைக் கூறித் தங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டாளென்று அவர்களே நம்பிக்கொண் டிருக்கிருர்கள். ஜாலக்காரன் இரவு ஒரு மணிக்கு வந்து நீலாளைத் தன் வீட்டிலிருந்தழைத்துச் சென்

ருன் என்ற சங்கதி பாப்பம்மாள் என்ற மூதாட்டிக்குப் பிரத்தியக்ஷமாய்த் தெரிந்தே யிருக்கிறது. இவ்வாறிருக்கையில் இவர்கள் நீலாளைக் கொன்றுவிட்டார்களென்று செல்வநாதன் உணர்வது எவ்வளவு சுலபம் என்பது இவர்கள் புத்தியிற் படவேயில்லை. அச்சிந்தனையே அச்சமயம் அவர்கள் மனதிலுதிக்கவில்லை. எங்கும் நிறைந்துள்ள எல்லாம் வல்ல பரம்பொருள் அவரவர்கள் உள்ளத்திலேயே யிருந்து எல்லாச் செயல்களையும் பார்த்துக்கொண்டே யிருக்கிறார் என்ற நினைப்பு அவர்களுக்குக் கிடையவே கிடையாது. ஆகையால் தங்கள் கொடிய பாதகச்செயல் யாவர்க்கும் தெரியாதென்றும், தாங்கள் ஒரு அத்தாட்சியும் வெளிக்குத் தோற்றவிடாமலே தங்கள் கொலை பாதகச் செயலைச் செய்துவிட்டதாகவும், அதிற் சம்பந்தப்பட்ட முக்கிய அத்தாட்சி அகழிச் சேற்றில் மூடப்பட்டதென்றும் கருதித் தங்கள் மனக் குழப்பத்தை மறக்க நன்றாய்க் குடிக்கத் தொடங்கினார்கள்.

---

82 - வது அத்தியாயம்

நேயர்களே! இப்போது நாம் இத்துஷ்டர்களை அங்கேயே விட்டுவிட்டு பருதிபுரத்தில் நடக்கும் சில சம்பவங்களைக் கவனிக்க வேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமா யிருக்கிறது.

பரிதி புரத்திலுள்ள போலீஸ் சிறைச்சாலையில் ஜகதீசன் சிறைப்பட் டிருப்பதை நண்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள். மரகதவல்லியின் புத்திரிகளில் ஒருத்தியாகிய ஜானகி என்பவள் மாறுபெயர் வைத்துக்கொண்டு சிறைச்சாலையிலுள்ள ஜெகதீசன் அறைக்குட் பிரவேசித்து தன்

தந்திர சாமார்த்தியங்களை யெல்லாம் காட்டி அவனைத் தன் வலையிற் சிக்கச்செய்ய முயன்று மூன்றுவாரங்க ளாயின. அவள் கடைசியில் தான் இன்னுளென்ற உண்மையை யவன் தற்செயலா யறிந்து கொண்டதை யுணர்ந்து உடனே தன் பிரியப்படி நடக்கா விட்டால் தான் பிராணத்தியாகம் செய்து கொள்வதாய்ச் சபதங் கூறினள். அதனற்றான் ஜெகதீசன் மிக்க மனம் வருந்தி "அய்யோ! கடவுளே! நீ யெனக்குப் பைத்திய முண்டாகச் செய்து விடுவாய்" என்று கூறினன். அதற்கவள் "ஓ! நான் உன்மேற் பூரணகாதல் கொண்டிருக்கிறேன் என்று நீ யறிவாய்" என்றாள். அச் சமயத்தில் தான் கோமளவல்லி அந்த அறையின் அருகில் கொண்டு வரப்பட்டதும் அம்மொழிகளைக் கேட்டு தவறாய் அர்த்தம் செய்துகொண்டு ஜெகதீசன் தனக்குத் துரோகம் நினைத்ததாய்க் கருதி மனமுடைந்து கூவியதும். அக்குரலைக் கேட்ட ஜெகதீசன் உண்மையை யறிந்து துயரமும் கோபமும் சகிக்க முடியாமல் ஜானகியை நிந்திக்கத் தொடங்கிய போது மூர்ச்சையாய் விழுந்து விட்டான். முன்னமே கூறப்பட்ட இச்சங்கதிகள் நமது நேயருக்குக் கவனம் வாட்டுமென்று மறுபடி யிங்கு கூற நேர்ந்தது.

ஜெகதீசனுக்கு ஸ்மரணை வந்தபோது தான் பத்துநாட்களாய் ஸ்மரணை யற்றிருந்ததாய்க் கேள்விப்பட்டான். அவன் அருகில் ஒரு வைத்தியரும் ஒரு செவிலித்தாயும் இருந்தார்கள். அவன் கோமளவல்லிமேல் சத்தியமான காதல்கொண் டிருப்பவ னாதலால் "அந்தோ கோமளவல்லி நாம் தன்னைத் துரோகம் செய்ததா யெண்ணிக் கொள்வாளே-நாம் அவளுக்கு உண்மையை எப்படி தெரிவிப்பது" என்று மிக்க துயரத்தி லாழ்ந்தான். அவன் வைத்தியரை நோக்கி "ஒரு கடிதம் எழுத எனக்கு அனுமதி யளிக்க

வேண்டும்'' என்று கேட்டான். அவர் தனக்கு அது விஷயத்தில் அதிகாரமில்லை என்று கூறிவிட்டார். பிறகு போலீஸ் அதிகாரியைக் கேட்டதற்கு அவரும் அப்படியே கூறிவிட்டார். பிறகு அந்த அதிகாரியை நோக்கி கோமளவல்லி கந்தபுரியிலிருந்து எப்படி இங்கு வந்தாளென்றும், ஜானகி சிறைச் சாலையிலுள்ள தன்னறைக்கு எப்படி வர நேரிட்டதென்றும் வினவினன். அவர் அதற்கு விடை யளிக்க மறுதளித்து விட்டார்.

இனி இவனை நம்புவதில் சற்றும் பயனில்லை. இவன் ஈவிரக்க மில்லாத பரம துஷ்டர்களின் கையாயுதமா யிருக்கிறுன் என்று உணர்ந்துகொண்டு கடைசியில் "நான் எவ்வளவுகாலம் இங்கு அடைபட்டிருக்க வேண்டும்?" என்று கேட்டான்.

அதன்மேல் போலீஸ் அதிகாரி:—"நான் கூறுவதைக் கேள். இப்போது உன் விஷயங்களைப் பற்றிய ஏற்பாடுகளை நடத்தும் காரண ஆசாமிகள் நீ சுகமடையும் காலத்தை யெதிர்பார்த்து ஒரு ஏற்பாடு செய்திருக்கிறுர்கள். அதன்படி பார்த்தால் நீ இங்கு இருப்பதும் இந்த நிமிடமே விடுதலை யடைந்து உன் இஷ்டப்படி செல்வதும் உன் வசமிருக்கிறது. அவர்கள் ஒரு பத்திரம் எழுதி யிருக்கிறுர்கள். அதில் கண்ட நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு அதில் கையொப்பம் வைத்துவிட்டால் இதேநிமிடம் நீ நிம்மதியாய் இந்நகரிலுள்ள ஒரு நேர்த்தியான ஹோட்டலுக்குச்சென்று தங்கியிருக்கலாம்" என்றுர்.

ஜெகதீசன் சற்று சிந்தித்து "ஆ அப்பத்திரத்தைக்காட்டும் பார்ப்போம்" என்றுன். அதற்குமேல் அவன் கண்களுக்கு இருள் மூடியதுபோல இருந்தபடியால் "ஆ! இதைப்

பார்ப்பதில் சற்றும் பயனில்லை. மேலும் இதில்கூறப்பட்ட நிபந்தனைகள் என் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி கௌரவத்தோடு நான் ஒப்புக் கொள்ளத்தக்கவைகளா யிராவென்றே யென் புத்திக்குப் புலப்படுகின்றது'' என்றான்.

போலீஸ் அதிகாரி "அப்படி நினைப்பது தவறு; இக்காலத்தில் வீணாக கௌரவம் முதலிய வாய்ச்சொற்களை நம்பிக் கொண்டு இக்கட்டில் சிக்கிக் கிடப்பது மூடத்தனம். உன் விவகாரங்களை நடத்துவோர் மிக்க அதிகாரமுடைய நிலையிலிருக்கிறார்கள். மாணபரியந்தம்கூட உன்னையொரு பயித்தியக்கார சாலையில் வைத்து விடுவார்கள்'' என்றார். ஜெகதீசன் மிக்க வெருப்பும் கோபமுமடைந்து,

"அய்யா போதும், போதும். உமது புத்திமதியை இத்தோடு நிறுத்தும். சற்றும் நீதியின்றி கொடிய அக்கிரமத்தைச் செய்யும் துஷ்டர்கள் கையில் நீர் ஒரு ஆயுதமா யிருக்கிறீர். உமது மனச்சாட்சிக்கு விரோதமாகவே நடப்பவர்; உமக்குக் கொஞ்சமேனும் நீதியென்பதும் ஜீவகாருண்ய மென்பது மிருந்தால் இப்படி நடக்கமாட்டீர். என்ன வருமானம் வருவதாயினும் செல்வாக்குண்டாவதாயினும் இத்தகைய அடிமைத் தொழிலி லிருக்கமாட்டீர். "பழிமலைத்தெய்திய வாக்கத்திற் சான்றோர் - கழிநால் குரவேதலை'' அதாவது பழிபாவங்களைச் செய்து பொருள் சேகரிப்பதிலும் தரித்திரத்தை யனுபவிப்பதே மிக்க மேன்மையென்று சான்றோர் கருதுவர்.

ஆயினும் ஒன்று மட்டும் கூறுகிறேன். இப்போது நீங்கள் என்ன செய்தாலும் செய்யலாம். ஆனால் கடவுள் கூடிய சீக்கிரத்தில் உங்களுக்குத் தக்க தண்டனை விதிக்காமல் விடமாட்டார். இதுமட்டும் சத்தியம்! சத்தியம்! என்று மனதில் வையும்'' என்றான்.

ஜெகதீசன் கூறியவை யாவும் பேசாமல் கேட்ட போலீஸ் அதிகாரி ஒன்றும் விடை கூறாமல் அறையை விட்டுச் சென்றான். அது முதல் ஒருவாரத்திற்குள் ஜெகதீசன் பூரண சுகமடைந்தான். ஆனால் இந்த ஒருவாரத்தில் அவன் மனம்மட்டும் பெருங் கலவரத்தி லிருந்தது.

முதலாவது சுகசிங்கம் பிரபுவே இளவரசிக்குத் தீங்கு செய்யும் இப்பெரிய சதியாலோசனையை யேற்பாடு செய்தவன் என்று அவன் நன்கறிவான். இரண்டாவது இப்போது எவ்விதத்திலேனும் இந்தச் சதியாலோசனையின் விவரம் பகிரங்கத்திற்கு வந்துவிட்டால் தன் மானம் அடியோடு போய்விடுமாதலால் அதற்கு ஒரு இடையூறும் நேரிடாமல் அது பூரணமாய் நிறைவேறுவதற்கான முயற்சிகளையெல்லாம் அப்பிரபு கட்டாயம் செய்வானென்றும் அவன் அறிவான். இதுமட்டுமல்ல. அப்பிரபு தான் கோமளவல்லியை மணம் புரிவதைத் தடுக்கும் காரணம் இன்னதென்று ஜகதீசன் நன்கறிவான். ஆகையால் ஈவிரக்கம் நீதி சற்றுமில்லாதவன், எத்தகைய அக்கிரமத்திற்கு மஞ்சாதவன் அப்படிப்பட்ட அப்பிரபு கோமளவல்லிக்குத் தந்திரமாய் எத்தகைய தீங்கு செய்வானோவென்று உள்ளத்தில் மிக்க பீதி யடைந்தான். ஆயினும் கடவுளின் கருணையிலும் தன் சத்தியமான நெறியிலும் நம்பிக்கை வைத்து "சரி எது வந்தாலும் வரட்டும் கடவுளிருக்கிறார்" என்று துணிந்திருந்தான்.

அந்த ஒருவாரங் கழிந்ததே டாக்டர் வந்து ஜகதீசனை நோக்கி "பூரண சுகமடைந்து விட்டாய். ஆதலால் நான் இனி யுன்னை வந்து கவனிக்கவேண்டிய அவசியமில்லை" என்றார்.

ஜகதீசன் அவருடைய உதவியைக் கோரலாமாவென்று சிந்தித்தான். மேல் அதிகாரிகள் இருக்கிற நிலைமையைக் கருதும்போது டாக்டர் நல்ல எண்ண முடையவனுயினும் தன் பிரியப்படி நன்மை செய்யச் சக்தியுடையவ னல்லவென்று அவன் புத்தியிற் பட்டபடியால் ; பேசாமல் டாக்டருக்குத் தன் நன்றியை வெளியிட்டு வந்தன மளித்தான். டாக்டர் விடை பெற்றுக்கொண்டு சென்றூர்.

டாக்டர் சென்றுலும் ஜகதீசனுக்கு வேளைக்கு ஔடதமும் ஆகாரமும் கொடுத்து தக்கபடி உபசாரம் செய்துவரும் செவிலித் தாயாகிய மூதாட்டி மட்டும் அச்சமயம் அறையில் நின்றுகொண்டிருந்தாள். அவள் பாஞ்சால நாட்டாள். இதுகாறும் ஜகதீசனுக்கு மனப் பூர்வமாய் அன்போடும் சிரத்தையோடும் யாவும் செய்துவந்தாள். ஆனுல் அந்த நிமிடம் வரையில் தன் வேலை விஷயத்தைத் தவிர ஒரு வார்த்தைகூட அனுவசியமாய் ஜகதீசனிடம் பேசியவளல்ல.

அப்படிப்பட்டவள் டாக்டர் சென்றதும் ஜகதீசனை இரக்கம் பொருந்திய ஒருவிதப் பார்வையாய்ப் பார்த்தாள். அதை யறிந்த ஜகதீசன் அம்மூதாட்டியை நோக்கி, "ஏனம்மா! நீ கூட என்னைவிட்டுப் போய்விடுவாயோ?" என்றுன்.

அதற்கு அம்மாது "அவ்விஷயம் உன்னைப் பொறுத்த தாயிருக்கிறது. நீ புத்திசாலியானுல் உடனே யொரு வேலை செய்யவேண்டும். அதாவது செவிலித்தாய் மட்டும் இன்னும் சில நாட்களுக்கு என்னிடம் இருக்கவேண்டும்" என்று போலீஸ் அதிகாரிக்கு எழுதவேண்டும். அவன் அப்படிச் செய்ய தடுமாற்றமுற்றுல் மறுபடி உனக்குப் பழையபடி வியாதி வருவதாய் நீ பாசாங்கு செய்யவேண்டும். அப்

போது அவன் கட்டாயம் தடை சொல்லமுடியாது. என் மேல் அவனுக்குப் பூரண நம்பிக்கை யுண்டு. நான் கடந்த இருபது வருடங்களாக இங்கு வேலைசெய்கிறேன். ஆகை யால் என்மேல் எள்ளளவு சந்தேகமு முண்டாகாது'' என்று இரகசியமாய் மொழிந்தாள்.

அம்மூதாட்டியின் மொழிகளைக் கேட்ட ஜகதீசன் மிக்க வியப்புற்றான். ஆயினும் நடந்த அனுபவங்களால் அவ சரப்பட்டு ஒருவரையும் நம்பலாகாதென்று அவளை நோக்கி, "ஏனம்மா! நீ கூறும் வார்த்தைகளால் நான் என்ன அறிந்து கொள்ள வேண்டுமோ சற்று வெளிப்படையாய்க் கூற வேண்டும்'' என்றான்.

அம்மாது "நீ ஒப்புக்கொண்டால் நான் உனக்கு உதவி செய்ய விரும்புகிறேன். உதவி செய்யக்கூடிய நிலைமையி லிருக்கிறேன்'' என்றாள்.

இம்மொழிகளைக் கேட்ட ஜகதீசன் மிக்க வியப்பும் சந்தோஷமு மடைந்து "அப்படியானால் எந்த காரியத்தில் எனக்கு நீ உதவி செய்யக்கூடும் என்று கருதுகிறாய்?'' என்றான். அம்மூதாட்டி "உன்னை இதிலிருந்து மீட்டுக் கொண்டு போய்விட பிரயத்தனங்கள் நடப்பதாய்த் தெரி கிறது. ஆனால் அதைப்பற்றிய ஏற்பாடுகளின் விவரம் இன்னதென்று இதுகாறும் என் வரையில் எட்டவில்லை'' யென்றாள்.

ஜகதீசன் "நீ கூறுவது இன்னதென்று எனக்குச் சற் றும் விளங்கவில்லை. கடந்த ஒருவாரமாக டாக்டர் வந்து சென்றதும் நீ தனியாகவே யென்னோடிருந்தும் ஒரு வார்த்தையாவது ஜாடையாகவேனும் கூறியதில்லையே'' என்றான்.

மூதாட்டி:—ஆம்; ஏனெனில் இன்று வரையில் உன் விஷயமான சங்கதி ஒன்றும் எனக்கு எட்டவில்லை. இன்றுதான் தெரிந்தது. ஆகையால் இன்று கூறினேன்.

ஜகதீசன்:—இன்று என்ன விஷயம் என்னைப்பற்றி உனக்குத் தெரியவந்தது?

மூதாட்டி பின்வரும் சங்கதிகளைக் கூறத் தொடங்கினாள்:—

"இன்று நான் உனக்காக ரொட்டி வாங்கிவரக் கடைக்குச் சென்றபோது உங்கள் நாட்டு மனிதன் ஒருவனைச் சந்தித்தேன். அம்மனிதன் என் அருகில் வந்து "நீ சிறைச்சாலையில் ஓர் தொழிலாளி யென்று கருதுகிறேன்" என்றான். நான் ஆம் என்றதே அவன் தன் மடியிலிருந்து கைநிறைய சவான்களை எடுத்து "அம்மா உன்னிடம் கொஞ்சம் இரகசிய விஷயம் பேசவேண்டும். இதைத் தற்சமயம் பெற்றுக்கொள்" என்றான். நான் அவனை ரொட்டிக்கடைக்கு வரும்படி கூறினேன். இருவரும் அங்கு தனியான ஒருவிடத்தில் உட்கார்ந்தபின் அம்மனிதன் "அம்மா! நீ மட்டும் எனக்கு ஒரு உதவி செய்தால் உண்மையில் பெரும் புண்ணிய காரியத்தைச் செய்தவளாவாய். இப்பணம் இப்போது உனக்கு ஒரு நம்பிக்கைக்காக அளித்ததே யன்றி சரியான பரிசல்ல" என்றான். நான் என்னாலானவரை செய்வதாயொப்புக்கொண்டதே அவன் இங்கு என் தொழிலென்னவென்று கேட்டான். நான் சிறையா யிருப்பவர்களில் வியாதி யுற்றவர்களுக்கு உபசாரம் செய்வதென்று கூறியதும் அவன் முகத்தில் ஒருவித சந்தோஷப் பிரகாசம் உண்டாயிற்று. உடனே அவன் உன் பெயரைக்கூறி நீ யந்த ஆளை யறிவாயாவென்று கேட்டான். நான் தற்சமயம்

உன்னிடம் செவிலித்தாயா யிருப்பதைக் கூறியதும் அவன் மிக்க சந்தோஷ மடைந்தான். பிறகு அவன் முன் ஜாக்கிரதையா யிருக்கவெண்ணி நான் நம்பத் தக்கவளென்று உன்னிட மிருந்து தக்க அத்தாட்சி கொண்டுவந்தபின் மற்ற விஷயங்களைக் கூறுவதா யியம்பினான். என் வார்த்தைகளை நீ நம்புவதற்காக உன்னிட மளிக்கும்படி ஒரு அடையாளம் என் வசம் கொடுத்தனுப்பி யிருக்கிறான்'' என்றாள்.

ஜகதீசன் மிக்க ஆவலோடு அதென்ன கொடு என்று அவள் கொடுத்த ஒரு கடிதத்தை வாங்கி வாசித்தான். அதில் "கோமளவல்லி தன் தமக்கையைச் சந்தித்தாள். அத்தமக்கை க்ஷேமமான நிலைமையிலிருக்கிறாள். இந்த அடையாளத்தால் உனக்காகச் சினேகர் வெளியில் காத்துக் கொண் டிருக்கிறார்களென்று நீ நம்பவேண்டும். இக்கடிதம் கொண்டுவரும் மாது நம்பத் தக்கவளென்று தெரிவதற்காக ஒரு அடையாளம் கொடுத்தனுப்பு." என்றிருந்தது.

இப்போது ஜகதீசனுக்கு உண்டான களிப்பிற் களவேயில்லை. முதலாவது தன் காதலி க்ஷேமமா யிருக்கிறாளென்று தெரிந்தது. இரண்டாவது அவள் தன் தமக்கையைச் சந்தித்தாள். அவர்களிருவருமே தன்னை விடுவிக்க ஏதோ ஏற்பாடுகள் செய்வதா யிருக்க வேண்டும். அப்படியாயின் தன் காதலி தன்னை வெறுத்து விட் டிருக்கமாட்டாளென்று அவன் மனதில் ஒருவித நம்பிக்கை யுதித்தது. அவன் முகத்தில் சந்தோஷப் பிரகாசம் ஜொலித்தது. இச்சந்தோஷத்தால் சற்று நேரம் தற்சமய விவகாரத்தை மறந்துவிட்டான்; உடனே யந்த நினைப்பு வந்ததும் கலவர முண்டாயிற்று.

ஏனெனில், முதலாவது அம்மூதாட்டியை எப்படி நம்புவதென்பது. முதலாவது இப்போது என்னசெய்வது?

என்று சிந்தித்தான். கடைசியில் அம்மாதை நோக்கி "நீ பார்த்த மனிதன் எப்படி யிருக்கிறுன்?" என்று கேட்டான்.

மூதாட்டி:—"அவன் தடித்த வுருவமுடையவன். நடுத்தரமான உயரம். வயது நாற்பதிருக்கும். கறுத்த முறுக்கு மீசை யுடையவன். போர்வீரனைப் போன்ற பார்வையும் பார்ப்போர் அஞ்சத்தக்க உருவமு முடையவன். போர்வீரனைப் போலவே உடை யணிந்திருக்கிறுன். கையில் பயங்கரமான பருத்த தடி வைத்துக்கொண்டிருக்கிறுன்" என்ருள்.

ஜகதீசன்:—"அவன் யாரென்று சற்றும் எனக்கு விளங்கவில்லை" என்ருன்.

அவனுக்குச் சற்றுநேரம் ஒரு யோசனையுமில்லை. இவளை யெப்படி நம்புவதென்பது ஒரு யோசனை. மறுபடி சிந்தித்துப் பார்த்தான். "நமக்கு இங்கு இதற்குமேல் இவர்கள் சூது செய்யவேண்டிய காரணமென்ன விருக்கிறது? அப்படி யிருந்தாலும் கோமளவல்லி சங்கதி யெப்படி இவர்களுக்குத் தெரியும். நன்மைபெற வேண்டுமாயின் சில இக்கட்டுகளுக்குத் துணிந்தே தீரவேண்டும். கடவுள் விட்ட வழியாகிறது" என்று தீர்மானித்துக்கொண்டு உடனே அம்மாது கொண்டுவந்த கடிதத்தின் பின்னல்,

"கோமளவல்லி கந்தபுரிக்குப் போய்விட்டாளா? அவள் தமக்கை கர்ப்பகவல்லி இரத்னபுரியிலேயே யிருக்கிறுளா?" என்று எழுதி யம்மூதாட்டியிட மளித்து நீ யெப்போது மறுபடி அம்மனிதனைக் காண்பாய் என்று வினவினன்.

மூதாட்டி "இரவு ஏழுமணிக்குக் காண்பேன். இதற்கிடையில் நீ போலீஸ் அதிகாரிக்கெழுதி என்னை யுன்னிடமே

இன்னும் கொஞ்சநாட்கள் இருக்கச் செய்யும்படி வேண்டிக் கொள்'' என்றாள்.

ஜகதீசன் அவ்வாறே உடனே போலீஸ் அதிகாரிக்கு எழுதினான். அவர் கீழ்க்கண்ட விடையை யனுப்பினார்:—

"உமது கடிதம் கிடைத்தது. நீர் இங்கு சிறைப்பட்டிருக்குமட்டும் அந்த செவிலித்தாய் உமக்கு உபசரணை செய்துகொண்டிருக்கட்டும். ஆனால் நீர் பூரண சுகமடைந்து விட்டதாய் டாக்டர் தெரிவித்தபடியால், நான் கூறிய பத்திரத்தில் கண்ட நிபந்தனைகளுக்கு நீர் ஒப்புக் கொள்ளாவிட்டால் இன்னும் இரண்டொரு நாட்களில் உம்மை வேறிடத்திற் கனுப்பிவிடும்படி நான் கட்டளையிடப் பட்டிருக்கிறேன்''

ஜகதீசன் இக்கடிதத்தை அம்மூதாட்டிக்கு வாசித்துக் காட்டிவிட்டு அவள் கடிதத்தை யெடுத்துச் சென்றபின் ஆவலோடு அவள் வரவிற்கு எதிர் பார்த்திருந்தான். அவள் சுமார் ஒருமணி நேரங் கழித்துத் திரும்பிவந்தாள். அவள் ஜகதீசனை நோக்கி,

"நான் அந்த ஆளைச் சந்தித்து உன் கடிதத்தை யளித்தேன். அவன் திருப்தி யடைந்து என்னை யொரு வண்டியிலேற்றிக்கொண்டு பெரிய தெருவிலுள்ள ஒரு வீட்டிற் கழைத்துச் சென்றான். அங்கு சிவந்த மீசையும் சற்று கெம்பீரமான முகமுமுடைய உங்கள் நாட்டான் இன்னொருவனிருந்தான். அவன் கௌரவமான உடை யணிந்திருந்தான். இவர்களிருவரும் சற்றுநேரம் பேசினார்கள். அப்பாஷை யெனக்கு விளங்கவில்லை. ஆனால் நான் முதலில் கண்ட மனிதனை மற்றவன் காப்டன், காப்டன் என்று அழைப்பதை மட்டும் அறிந்துகொண்டேன்'' என்றாள்.

ஜகதீசன் "அவர்கள் யாரென்று எனக்குத் தெரியவில்லை" யென்றான்.

மூதாட்டி:—"அப்பெரிய மனிதன் என்னை மரியாதையாய் உட்காரச்சொல்லி மெதுவாய்ப் பல கேள்விகள் கேட்டார். அதாவது சிறைச்சாலையின் அமைப்பு, அதில் உன் அறை யிருக்குமிடம், காவல் ஏற்பாடு, போலீஸ் அதிகாரியின் குணம் நடக்கை முதலியவைகள் யாவும் கேட்டார். அவர் கேட்பதன் கருத்து எனக்குத் தெரியுமாதலால், நான் அவரை நோக்கி 'அய்யா! போலீஸ் அதிகாரி யங்கிருக்கு மட்டும் பலவந்தமாய் ஜகதீசனை விடுவிப்பது சாத்தியமான காரியமல்ல' என்று கூறியதோடு சீக்கிரத்தில் உன்னை வேறிடத்திற் கனுப்பப்போவதாய் இன்று போலீஸ் அதிகாரி கடிதம் அனுப்பியதையும் கூறினேன். உடனே அவர்களுக்குள் ஒரு புது யோசனை யுதித்தது. அவர்கள் இருவரும் சற்றுநேரம் ஆழ்ந்த சிந்தனையோடு யோசனை செய்தார்கள். கடைசியில் உடனே இக்கடிதத்தை யெழுதி யளித்து உன்னிடம் கொடுக்கச் சொன்னார்கள்" என்று கூறிக்கொண்டே கடிதத்தை யவனிடமளித்தாள். அக்கடிதத்தில்,

"உன் கடிதம் வந்தது; நீ எழுதிய விஷயம் உன்னையன்றி போலீஸ் அதிகாரிக்காவது வேறு யாருக்காவது தெரியாது. ஆகையால் நீயே அக்கடிதத்தை யெழுதினையென்று எங்களுக்கு நம்பிக்கை வந்தது. உன்னை வேறிடத்திற்குக் கொண்டுபோவதாய்த் தெரிகிறது. எந்த விடத்திற்கு எப்போது கொண்டுபோகப் போகிறார்கள் என்பதை மட்டும் அறிந்துகொள். அதைப்பற்றிக் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும் அதனால் சற்றும் மனச்சோர் வடையவேண்

டாம். ஏனெனில் எவ்விதத்திலேனும் எங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்ள நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். நாங்கள் சதா உன்மேல் மோகூலிருக்கிறோம். உன் எதிரிகள் செய்யும் தந்திரங்களனைத்தும் எங்கள் காரியத்தைத் தடுக்கமுடியாது" என்று எழுதி யிருந்தது.

இப்போது அவன் மனதிற் பூரண நம்பிக்கையும் சந்தோஷமும் உண்டாய்விட்டது. தன்னை வேறிடத்திற்குக் கொண்டுபோகிற சங்கதியை யறியவேண்டுமாயின் போலீஸ் அதிகாரியைக் கண்டு பேசவேண்டும். அச்சமயம் இரவு ஒன்பது மணி யாய்விட்டதால் மறுநாட் காலைப் போஜனத்திற்குப் பின் கண்டு பேசலாமென்று எண்ணினான்.

மறுநாட் காலை யவன் போஜனம் செய்து முடிந்ததே போலீஸ் அதிகாரியே அவன் இருக்கும் அறைக்கு வந்து கீழ்க்கண்டபடி கூறினர்:—

"இப்போது நான் ஒரு விசேஷ சங்கதி யுனக்குக் கூற வந்தேன். அதாவது இரத்னபுரியில் நடந்த ஏதோ சில விசேஷ சம்பவத்தால் நான் கூறிய நிபந்தனைகளில் ஒரு நிபந்தனை யிப்போது நீக்கப்பட்டிருக்கிறது. அதாவது நீ கோமளவல்லியை மணம் செய்யக் கூடாதென்ற நிபந்தனை" என்றதே.

ஜெகதீசன் "ஆ! இதில் என்னமோ விசேஷமிருக்கிறது. தாங்கள் வேண்டுமாயின் அதைப்பற்றிக் கொஞ்சம் விவரமாவது கூறக்கூடும் என்று நம்புகிறேன். இதற்கெல்லாம் சுகசிங்கம் பிரபுவே மூலகாரணமென்று நான் அறிவேன்" என்றான்.

போலீஸ் அதிகாரி:—"இருக்கட்டும் இருக்கட்டும். இப்போது அவள் உன்னை மணம்புரியத் தக்க அந்தஸ்தி லிருப்

பவளே யென்று தெரிய வந்திருக்கலாகும். எப்படியோ அந் நிபந்தனை யெடுபட்டும் போயிற்று. இனி இந்த இளவரசி யைப் பற்றிய விஷயத்தை மட்டும் நீ யடியோடு மறந்து விடுவதாயும், அது விஷயத்தில் பிரவேசிப்பதில்லை யென்றும், அதைப்பற்றி யெவ்வளவு சமாசாரம் தெரிந்திருந்தாலும் அது ஒன்றுமே தெரியாதுபோல் இருந்து விடுவதாகவும் வாக்களித்து விட்டால் நான் கூறியபடி இந்த நிமிடம் வேண்டுமாயினும், நீ தாராளமாய் உன் சுயேச்சைப்படி செல்லலாகும்'' என்றார்.

ஜெகதீசன் அவரை நோக்கி, "இந்த நிபந்தனையை நீக்கி யதற்காக நான் நன்றியுடையவனாகவே யிருக்கிறேன். ஆயி னும் மற்ற நிபந்தனை யிருக்கிறதே, அதை நான் என்ன துன்ப மனுபவிப்பதாயினும் ஒப்புக் கொள்ளமாட்டேன். அப்படிச் செய்தால் கோமளம் என்னை யொரு ஆண்பிள்ளை யாகவும் சுத்தவீரனாகவும், நம்பவே மாட்டாள். என்னை யொரு சுயநலங்கருதும் கோழையாகவே கருதுவாள். மேலும் ஒரு பெரிய அக்கிரமம் நடக்கிறதென்றும் அதுவும் சுத்த நிரபராதியாகிய ஒரு இளவரசிக்கு அக்கிரமஸ்தர்களா கிய சண்டாளர்கள் வாயாற் கூறொணாத அபாண்டமான பெரிய அநீதத்தைச் செய்யக் கருதி யிருக்கிறார்களென்று தெரிந்து, அதைத்தடுத்து அந்த இளவரசியைக் காப்பாற்று கிறேன் என்று வாக்களித்து விட்டு, அதற்காக சுயநலத்தை யொழித்து கஷ்டத்தோடு புறப்பட்டு இவ்வளவு தூரம் வந்த பிறகு கோழையைப்போல் எடுத்த நற்காரியத்தைக் கைவிட்டுப் பெண்டுகள் மிரட்டலுக்குப் பயந்துத் திரும்பிப் போகமாட்டேன் என்பது சத்தியம்'' என்றான்.

போலீஸ் அதிகாரி தன்னால் கூடியவரையில் பலவிதங்க ளாக அவனுக்குச் சமாதானம் கூறியும் அவன் ஒரே பிடி

வாதமாய் அந்த நிபந்தனைக்கு ஒத்துக்கொள்ள மாட்டே னென்று மறுத்து விட்டதை யறிந்து, "சரி. அப்படி யானல் எனக்கிடப்பட்ட கட்டளைப்படி நான் நடந்து கொள்ள வேண்டியதே" என்றான்.

ஜெகதீசன், "அதென்ன கட்டளை?" யென்றான்.

போலீஸ் அதிகாரி, "அக்கட்டளையாவது, உன்னைப் பைத்தியக்கார சாலையில் கொண்டுபோய் அடைத்துவிட வேண்டு மென்பதே. ஆகையால் நாளை யிரவு பதினேரு மணிக்கு நீ இங்கிருந்து கொண்டுபோகப்படுவாய். அதற் கிடையிலாவது அந்த நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டால் விடுதலை யடைவாய்" என்றான்.

இவ்வாறு கூறியதும் போலீஸ் அதிகாரி அங்கு நில்லா மல் உடனே அறையை விட்டுப் போய்விட்டான். மறு நிமி டம் செவிலித்தாய் அங்கு வந்தாள். ஜெகதீசன் உடனே அடியிற் கண்டபடி ஒரு கடிதம் எழுதினன்:—

"வெளியிலிருக்கும் என் அரிய நண்பர்களுக்கு, நீங்கள் யாரென்று எனக்குத் தெரியாது. நீங்கள் யாராயிருந்தா லும் சரி, மனப்பூர்வமாய் உங்களுக்கு எண்ணிறந்த வந் தன மளிக்கிறேன். உங்கள் கடிதம் கிடைத்தது. அது விஷ யத்தில் உங்களுக்கு இன்னும் பூரண நம்பிக்கை யுண்டாகும் வண்ணம் இன்னொரு அடையாளம் கூறுகிறேன். கோமள வல்லியின் தமக்கை யின்னும் பச்சியப்பப் பிள்ளை யிடமும் அவர் மனைவியிடமுந் தான் இருக்கிறளோ? என் விஷயம் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது. அதாவது நாளை இரவு பதி னேருமணிக்கு என்னை யிங்கிருந்து ஒரு பைத்தியக்கார சாலைக்குக் கொண்டுபோகப் போகிறார்கள். ஆனல் அது

எங்கிருக்கிறதென்று எனக்குத் தெரியாது. தெரிந்துகொள்ள வழியுமில்லை. இம்மூதாட்டியைப் பூர்ணமாய் நம்பலாகும்."

இவ்வாறு எழுதியதும் அவன் மனதில் திடீலென்று ஒரு சந்தேகம் உதித்தது. அதாவது இக்கிழவி நமது கடிதத்தை வெளியிலுள்ளவர்களுக்கும் அவர்கள் கடிதத்தை நமக்கும் கொடுத்து வந்தாலும் அதேகாலத்தில் எல்லா சங்கதிகளையும் போலீஸ் அதிகாரிக்குக் கூறிக்கொண்டிருந்தால் என்செய்வது என்ற சந்தேக முண்டாயிற்று. உடனே தன் எதிரிலிருந்த மூதாட்டியை யுற்றுநோக்கினன்.

அக்குறிப்பை யறிந்துகொண்ட அம்மூதாட்டி யுடனே யவனை நோக்கி,

"நீ இன்னும் என்மேல் அய்யங்கொள்கிருய். ஆயினும் உனக்கு நேர்ந்த அனுபவங்களால் நீ அப்படி நினைப்பது சுபாவமே. ஆனல் சற்று சிந்தித்துப்பார். முதலாவது அம்மனிதர்கள் முதலில் நான் உதவி செய்வேனே செய்ய மாட்டேனே வென்பதையும், நான் நம்பத்தக்கவளா யென்பதையும் அறியாமுன்னமே அவ்வளவு தாராளமாய் எனக்குப் பணம் கொடுத்தவர்கள்; அவர்கள் கோரிக்கை யீடேறிவிட்டால் எவ்வளவோ அதிகமாய்க் கொடுப்பார்களென்று நான் அறிவேன். அதை விட்டுவிட்டு இந்தப்போலீஸ் அதிகாரிக்கு இதையெல்லாம் வெளியிடுவதால் என்ன பயனுண்டு? அதற்கு மாருக இனி எப்போதும் என்மேல் சந்தேகம் கொண்டே யிருப்பான். ஆகையால் என் சுயநலத்தைக் கருதியே நான் உனக்குத் துரோகம் செய்யக் காரணமில்லை. இரண்டாவது அப்படித்தான் நான் துரோகம் செய்தாலும் உனக்கு இப்போ திருப்பதற்குமேல் என்ன கெடுதி நேரிடப்போகிறது. நீ களவு கொலை முதலிய குற்றம் செய்த குற்றவாளியல்ல. நீ சிறைச்சாலையிலிருந்து தப்பித்

துக் கொண்டுபோய்விட முயற்சி செய்தாயென்று தெரிந்தாலும் மற்ற குற்றவாளிக்குச் செய்யக்கூடிய மாதிரி உனக்கு வேறுவித தண்டனை யொன்றும் செய்ய வழியில்லை. ஆகையால் நீ கடைசிவரையில் என்னை நம்பிப் பிறகு மோசம் போனாலும் இப்போதிருக்கும் நிலைமையிலேயே யிருப்பாயேயன்றி வேறு புது இக்கட்டு ஒன்றும் உண்டாகப் போவதில்லை'' என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே "இவள் கூறுவது முழுமையும் சரியானதே, நாம் அய்யப்படுவது வீண். இவளை நம்பினால் பெரும்பாலும் நன்மை கிடைக்கும், நம்பாவிட்டால் பைத்தியக்காரர் சாலைக்குப் போய்ச் சேர்வது நிச்சயம்'' என்று அவன் மனதிற்பட்டது. எதற்கும் எச்சரிக்கையாயிருப்பது நலம் என்று தான் எழுதும் கடிதத்தின் முடிவில் எழுதிவிட்டு அதை யம்மூதாட்டியிடம் அளித்தான்.

அம்மாது உடனே வெளியிற்சென்று ஒருமணி நேரங் கழித்துத் திரும்பிவந்து ஜெகதீசனிடம் ஒரு கடிதத்தை யளித்தாள். அதில்:—"நண்பனே! கடிதம் கிடைத்தது. எதற்கும் எச்சரிக்கையாகவே நடப்பது நலமென்று நீ எழுதியபடி எங்கள் ஏற்பாடுகளைப்பற்றி ஒன்றும் கடிதத்தில் எழுதவில்லை. ஒன்றுமட்டும் கூறுகிறோம். நாங்கள் அசட்டையாகவாவது மந்தமாகவாவது இராமல் சுருசுருப்போடு நாங்கள் பிரவேசித்த காரியத்தைக் கட்டாயம் நிறைவேற்றிக் கொள்வோம் என்று பூரணமாய் நீ நம்பலாகும். உன்னைப் பைத்தியக்காரர் சாலைக்குக் கொண்டுபோவது ஆலசியப்படல் முதலிய ஏதாவது விசேஷ சம்பவம் நேர்ந்தாலன்றி நமக்குள் இனிக் கடிதப் போக்குவாவு நேரவேண்டியது அனுவசியமே. இம்மூதாட்டிக்கு மறுபடி நூறுசவான்கள் அளித்திருக்கிறோம்.''

இக்கடிதத்தைக் கண்டதும் ஜெகதீசன் மனதில் நிம்மதி யுண்டாயிற்று. ஒருவேளை யப்படி யிருப்பினும் ஒருவேளை நாம் எங்கே காட்டிக் கொடுக்கப் பட்டோமோ வென்று திகிலுண்டாயிற்று. அன்றும் மறுநாள் பகலும் ஒரு விசேஷமும் நடக்கவில்லை.

மறுநாள் இரவு சுமார் பத்துமணிக்குப் போலீஸ் அதிகாரி அவனிடம் வந்து மறுபடி முன் கூறப்பட்ட நிபந்தனைக்குச் சம்மதிக்கும்படி கோரினார். ஜெகதீசன் ஒரே பிடிவாதமாய் மறுத்துவிட்டான். அதன்மேல் அவர் முகத்தைச் சுளுத்திக்கொண்டு போய்விட்டார். பிறகு செவிலித்தாயும் விடைபெற்றுக்கொண்டு, அவனிடம் அன்பான வார்த்தைகளைக் கூறிச் சென்றாள். ஜெகதீசனுக்கு அப்போது அவள் உண்மையானவளென்று மனதில் உறுத்தியது.

83-வது அத்தியாயம்

இரவு பத்தரை மணிக்கு ஒரு ஜோடிக் குதிரைகள் பூட்டிய வண்டி வாயிற்படியில் வந்து நின்றது. அதன் முன் பக்கம் சவாரிமேல் இரண்டு சாரதிகள் உட்கார்ந் திருந்தார்கள். இரண்டு போலீஸ்காரர்கள் வந்து ஜெகதீசனை யிட்டு வந்து வண்டியில் ஏற்றினார்கள். அவர்கள் முதலில் ஹோட்டலுக்கு வந்து தன்னைச் சிறைசெய்து வந்தவர்களே யென்று ஜெகதீசன் அறிந்து கொண்டான். உடனே வண்டியின் தீபங்கள் ஏற்றப்பட்டதும் வண்டி சிறைச்சாலையை விட்டுப் புறப்பட்டது. போலீஸார் இருவரும் வண்டிக்குள் ஜெகதீசன் எதிரில் உட்கார்ந்து அவனைச் சாக்கிரதையோடு பார்த்துக்கொண்டே யிருந்தார்கள். அவர்

கள் முதலில் அவனிடம் பேசி அவன் எண்ணங்களை யறிய முயன்ருர்கள். ஆனுல் ஜெகதீசன் சற்றும் முகங்கொடுக்கா ததை யறிந்து பேசாம லிருந்தார்கள்.

வண்டி பருதிபுரத்தின் மத்தியிலுள்ள ஆற்றின் ஓரமே கொஞ்சதூரம் சென்று ஜன நெருக்கமான ஒரு பெரிய வீதியில் பிரவேசித்தது. அங்கு எண்ணிறந்த வண்டிகள் சென்றுகொண்டிருந்ததால் தன் வண்டியைத் தொடர்ந்து வேறெந்த வண்டியாவது பின்பற்றி வருகிறதா வென்று ஜெகதீசனு லறியக்கூடவில்லை. தன் நண்பர்கள் இச்சமயம் அப்படிவந்தால்தானே தன்னை விடுவிக்க முடியுமென்பது அவன் யோசனை.

வண்டி சுமார் ஒருமணி நேரம் சென்றபின் ஒரு மனி தன் ஒரு குதிரைமேல் ஏறிக்கொண்டு காண்போர் அஞ்சத் தக்க வேகமாய் மின்னல்போல் வண்டியைக் கடந்து சென் ருன். ஜெகதீசன் எதிரிலிருந்த போலீஸ்காரரில் ஒருவன் சட்டென்று சாளரத்திற்கு வெளியில் தலையைநீட்டி எட்டிப் பார்த்தான். அச்சமயம் அவனுடைய மேல் அங்கி விலகிய தால் அதன் உட்சேபியில் அவன் இரண்டு கைத்துப்பாக்கி களை வைத்துக்கொண்டிருப்பதை ஜெகதீசன் பார்த்தான். அந்தப் போலீஸ்காரன் தன் நண்பனை நோக்கி "அவன் குதிரை யவன் கைக்கு அடங்காமல் பறக்கிறது" என்ருன்.

இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் அதேமாதிரி இன் னெருவன் அதேமாதிரி குதிரைமேலேறிக்கொண்டு அவ் வாறே வேகமாய்ச் சென்ருன். அதைக்கண்டதும் சாளரத் தில் பார்த்துக்கொண்டிருந்த போலீஸ்காரன் தன் நண்பனை நோக்கி "இவர்கள் துரைத்தனத்தைச் சேர்ந்த அவசர சமா சாரக்காரர்களா யிருக்கவேண்டும்" என்ருன். மற்றவன்

"அப்படித்தான் இருக்கவேண்டும், அல்லது அமெரிக்கத் தானதிபதிகளின் ஆட்களா யிருக்கவேண்டும்" என்றான்.

பத்து நிமிடங்களுக்குள் ஒரு குதிரை வண்டியில் மூன்றுபேர் ஏறிக்கொண்டு அவ்வண்டியைக் கடந்து சென்றார்கள். அவ்வண்டியும் முன்சென்ற குதிரைகளைப் போலவே கண் மண் தெரியாமல் அதிவேகமாய்ப் பறந்தது. சாளரத்தில் பார்த்துக்கொண்டிருந்த போலீஸ்காரன் அதைக்கண்டதும் "அய்யா! இந்த வண்டி என்ன இவ்வளவு வேகமாய்ப் பறக்கிறதே. இதென்ன விஷயம் என்று ஒன்றும் தெரியவில்லை" என்றான்.

அந்த வண்டியில் செல்வோரே தன்னைக் காப்பாற்ற வந்த நண்பர்களென்றும், முன்சென்ற ஆட்கள் அவர்களுடைய ஆட்களென்றும் ஜகதீசன் கருதினான். பத்து நிமிடங்கள் கழிந்ததும் வண்டி ஒரு கட்டிடத்தினெதிரில் நிறுத்தப்பட்டது. உடனே வண்டியிற் பூட்டப்பட்டிருந்த புரவிகள் மாற்றப்பட்டு வேறு புரவிகள் கட்டப்பட்டன. கால்மணி நேரத்திற்குள் வண்டி மறுபடி புறப்பட்டது.

அரைமணி நேரத்திற்குள் அவ்வண்டி நகரத்தைக் கடந்து இருபுறங்களிலும் அடவிபோல் நெருங்கிய விருட்சங்களையுடைய ஒரு சாலையில் நுழைந்தது. அந்த விடத்தில் நெடுந்தூரம் வரையில் ஒரு குடிசை கூடக் கிடையாது. அத்தகைய பாதையில் வண்டி சென்றுகொண்டிருக்கிறது.

ஜெகதீசன் "ஆ! அவர்கள் நம்மை விடுவிக்க வேண்டுமாயின் இதுவே சரியானவிடம். நமக்குக் காவலாக இருவரே யிருக்கிறார்கள். சாரதிகளிடம் ஆயுதம் கிடையாது. அதோடு அவர்கள் வீணாய்ச் சண்டையில் தலையிட்டுக்கொள்ளப் பிரியப்பட மாட்டார்கள்" என்று கருதிக்கொண்டான்.

அந்த அடர்ந்த அடவியின் மத்தியில் நேராய்ச் செல்லும் பாதையில் வண்டி சென்றுகொண்டே யிருக்கிறது. ஜெகதீசனுடைய யோசனை யின்னும் முடியவில்லை.

அச்சமயம் திடீலென்று பாதையின் இருபுறத்திலிருந்தும் ஆட்கள் வேங்கைகள்போல் பாய்ந்து வந்து வண்டியை மடக்கிச் சாரதிகளைத் தாக்கினர்கள். ஒருவன் உடனே கீழே ஸ்மரணை யற்று வீழ்ந்து விட்டான். மற்றவன் "அய்யோ என்னைக் கொன்றுவிட வேண்டாம். நான் பேசாமலிருக்கிறேன்" என்றான். அவர்களிருவரும் உடனே கட்டப் பட்டார்கள். அதே காலத்தில் குதிரைகளின் வார்கள் அறுக்கப் பட்டதால் வண்டி நின்றுவிட்டது. ஏககாலத்தில் வண்டியின் இருபக்கங்களிலுமுள்ள கதவுகள் திறக்கப் பட்டதும் பக்கத்திற்கு ஒருவன் நின்று துப்பாக்கிப் பிடித்த கரத்தை முன்னுக்கு நீட்டினான்.

அச்சமயம் வண்டிக்குள்ளிருந்த போலீஸார் தங்கள் துப்பாக்கிகளை யெடுத்து வந்தவர்களை யெதிர்த்தே யிருப்பார்கள். ஆனல் ஜெகதீசன் முன் யோசனையோடு வண்டியின் கதவுகள் திறக்கப்படும்போதே இரண்டு போலீஸ்காரரையும் இருகரங்களாலும் சேர்த்து அழுத்திப் பிடித்துக்கொண்டு அவர்களோடு மல்லாடினான்.

இரண்டொரு நிமிடங்களில் வந்தவர்கள் உள்ளே நுழைந்ததும் போலீஸ்காரர் இருவரிடமு மிருந்த துப்பாக்கிகளைப் பிடுங்கிக்கொண்டு அவர்கள் கைகால்களைக் கட்டித் தரையில் போட்டுவிட்டார்கள். இவை யாவும் இரண்டொரு நிமிடங்களில் முடிந்துவிட்டன. உடனே வந்திருந்தவர்கள் ஜெகதீசன் கரத்தைப்பற்றி இனித் துரிதமாய் நடவென்று குறுக்காய்ச் செல்லும் ஒரு பாதை வழியே யழைத்துச்

சென்ருர்கள். அங்குச் சமீபத்திலேயே முன்பு இரண்டு ஆட்கள் ஏறிவந்த குதிரையும், பின்னுல் வந்த வண்டியும் இருந்தன. வண்டியிலிருந்த ஆள் இறங்கிவந்து சரி இனி ஆலசியமின்றிச் செல்லவேண்டியதே ஏ! காப்டன்! என்ருன். காப்டன் இதோ வென்று வண்டியின் முன்பக்கம் மேலேறிக் கொண்டான். மறுபடி அம்மனிதர் எச்சா! என்ருர். இன்னெருவன் இதோ விருக்கிறேன் பிரபுவே யென்று கூறி வண்டியிலேறிக் காப்டன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். குதிரைமே லேறிவந்த இருவரும் மறுபடி அப்படியே யேறிக்கொண்டார்கள். உடனே வண்டி அதிவேகமாய்ப் புறப்பட்டது. இன்னமும் நமது ஜெகதீசனுக்கு ஒரு விஷயமும் விளங்கவில்லை. தனக்காக இவ்வளவு தூரம் வந்து இவ்வளவு துணிகரத்தோடும் சாமார்த்தியத்தோடும் தன்னை விடுவித்தவர்கள் யார், இதற்கு மூலகாரணம் யார் என்பது ஒன்றுமே தெரியாது. ஆயினும் இவ்வளவு தூரம் நடந்த வரையில் கடைசியில் எப்படியாவது எல்லா சங்கதியும் வெளியாகும் என்று தனக்குள் சமாதானம் செய்துகொண்டான்.

---

84 - வது அத்தியாயம்

மேற்கண்ட சம்பவங்கள் நடந்து ஐந்து நாட்கள் கழிந்தன. இப்போது நாம் இரத்னபுரி நகரிலுள்ள குமாரவேல்பிரபுவின் மாளிகையில் என்ன நடக்கிறதென்று கவனிப்போம். அம்மாளிகையின் ஒரு விசாலமான அறையில் அப்பிரபுவின் மனைவியாகிய சீமாட்டி தன்னை யாடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண் டிருக்கிருள் ஏகாயகிச் சீமாட்டி பூரண வனப்புடையவளானதால் செயற்கை

வனப்பு அவசியமில்லை. ஆயினும் ஸ்திரீகளுக்கு எவ்வளவு வனப்பிருப்பினும் திருப்தி யுண்டாவதில்லை. பத்தாயிரம் வராகன் விலையுள்ள ஆபரணங்களை வைத்திருக்கும் ஒரு செல்வச் சீமானின் மனைவியாயினும் ஒரு விசேஷ சம்பவம் நேருங்கால் இலட்ச ரூபாய் நகைகளையுடைய ஒருவரிடம் போய் இரவல் வாங்கிவந்து அணிந்துகொள்ளும் வழக்கம் அவர்களுக்கு இயற்கையா யிருக்கிறது. நமது மாதரிடமுள்ள தீய வழக்கங்களில் இது ஒன்று.

ஏகநாயகி தன் அந்தரங்கத் தோழியாகிய ஜெகதாள் உதவியால் அன்று மாலை மிக்க நேர்த்தியான விலையுயர்ந்த உடைகளாலும் நவரத்னங்களாலும் தன்னை யலங்கரித்துக் கொண்டு காண்போர் உள்ளத்தைக் கவரும் வண்ணம் இருந்தாள். ஜகதாள் தன் எஜமானியை நோக்கி வியப்போடு "அம்மா இன்று தாங்கள் சொல்லொணு வனப்போடு காணப்படுகிறீர்கள்" என்று தன் வழக்கம்போல் முகஸ்துதி கூறினள்.

சீமாட்டி:—"மிக்க சந்தோஷம். நான் உனக்குக் கூறியிருப்பது நினைப்பிருக்கட்டும்"

ஜெகதாள்:—"நான் ஒருபோதும் தங்கள் கட்டளையை மறக்கமாட்டேனென்று தங்களுக்கே தெரியும்" என்றாள்.

சீமாட்டி:—"நானும் உனக்குத் தக்க கணவன் கிடைக்கும் போது நான் உனக்குச் செய்யவேண்டியதை மறக்க மாட்டேன்" என்றாள்.

ஜகதாள்:—"ஓ! அதற்கு இன்னம் காலம் இருக்கிறது. கலியாணம் செய்துகொண்டு புருடனேடு வாழ்வதைக்

கருதிக்கூட நான் தங்களைவிட்டுப் பிரிந்து போகமாட்டேன். நமது பிரபு எப்போது வருவார்?'' என்றாள்.

சீமாட்டி:—"எனக்கு நிச்சயமாய்த் தெரியாது. பெரும்பாலும் இன்னும் இரண்டு நாட்களில் வருவார். பருதிபுரத்திற்கு ஏதோ முக்கிய வேலையாய்ச் செல்வதாய்க் கூறினார். அவ்வளவே எனக்குத் தெரியும். நேரமாய் விட்டது. நான் உலகாம்பாள் சீமாட்டி வீட்டிற்குச் செல்ல வேண்டும்'' என்றாள்.

மறுகிமிடம் அவள் வீதியில் ஆயத்தமா யிருக்கும் தன் வண்டியில் போய் ஏறிக்கொண்டு ஜெகதாளுக்கு ஒருவிதச் சமிக்கை காட்டியதும் வண்டியை விடும்படி சாரதிக்குக் கட்டளை யிட்டாள்.

ஏகநாயகிச் சீமாட்டி உலகாம்பாள் மாளிகைக்கு நேராய்ச் சென்றாள். அங்கு பிரபுவமிசத்தில் பிறந்த சீமான்களும், பூர்வீகத்திலிருந்து செல்வமுடையவர்களும், செல்வர்க்குடையவர்களுமே அச்சீமாட்டியின் சிநேகத்தைப் பெற்று அவள் வீட்டில் 'நடக்கும் விருந்து கேளிக்கை முதலிய காலங்களில் அங்கு செல்ல அழைப்புப் பத்திரம் பெறக்கூடியவர்கள்.

ஆகையால் அன்று தாகிரியாகிய வேலப்பன் எவ்விதமாய் அங்கு எவ்வாறு வந்தானென்பது வியப்பே. ஆனால் அதற்குக்காரணம் இருக்கிறது. அதாவது குமாரவேல் பிரபுவின் மனைவியாகிய ஏக நாயகிச் சீமாட்டியின் கள்ளக்கையொப்பமிட்ட பத்திரங்கள் சில அவனிடம் சிக்கிக்கொண்டிருப்பதும் அதனால் அம்மாது அவனிடம் சிக்கிக்கொள்ள நேர்ந்ததும் நண்பர்கள் அறிந்த விஷயமே.

இக்காரணங்களால் பட்டமாவது பெருஞ்செல்வமாவது இல்லாத வேலப்பன் அச்சீமாட்டியின் மாளிகைக்கு

வரும் கௌரவத்தைப் பெற்றான். ஏகநாயகிக்கு அவன்மேல் மெய்யன்பில்லை யெனினும் தன்னுடைய கள்ளப்பத்திரங்கள் அவனிடம் சிக்கி யிருப்பதாலும், அளவுகடந்து வீண் செலவு செய்வதால் அடிக்கடி இக்காட்டில் சிக்கிக் கொள்ளும்போது அவன் உதவி வேண்டி யிருப்பதாலும் அவனை யுண்மையாகவே நேசிப்பவள்போல் அபிநயம்செய்து வந்தாள். அவள் தூண்டுதலாலேயே உலகநாயகிச் சீமாட்டி தன் மாளிகையில் நடக்கும் கேளிக்கை முதலியவைகளுக்கு அவனுக்கும் அழைப்புச் சீட்டனுப்ப லானாள்.

கள்ளக் காதலர் இருவரும் அன்று தோட்டத்தில் சந்தித்துப் பேசினார்கள். அப்போது அவர்கள் சம்பாஷணையின் முடிவில் ஏகநாயகி வேலப்பனை நோக்கி "இரவு பதினொரு மணிக்கு என் தோழி யிங்கு வருவாள். கால்மணி நேரத்திற்குள் நான் இவ்வீதியின் கோடிக்கு வருவேன். நீ அங்கு ஆயத்தமாய் ஒரு வண்டி வைத்துக் கொண்டிருக்க வேண்டும்" என்றாள்.

அந்த ஏற்பாட்டின்படி ஜெகதாள் என்ற தோழி வந்ததும் சீமாட்டி தன் உடையைத் தோழிக்களித்து அவளைத் தன்போல் ஆக்கிவிட்டு அவள் உடையைத் தான் அணிந்து கொண்டாள். இருவரும் சற்றுநேரம் குசுகுசுவென்று பேசிய பிறகு ஜெகதாள் சீமாட்டியின் வண்டியில் ஏறிக் கொண்டு மாளிகைக்குச் சென்றாள். பிறகு கால்மணி நேரங் கழித்து தோழியின் உடையை யணிந்துகொண்டிருக்கும் சீமாட்டி பின்பக்க வழியாய்ப் புறப்பட்டு வீதியின் கோடிக்குச் சென்றாள். அங்கு வேலப்பன் வண்டியோடு தயாராயிருந்தான். இருவரும் அங்கிருந்து கௌரி யென்ற மூதாட்டியின் வீட்டிற்குச் சென்றார்கள். அம்மாது இத்தகைய நெறி தவறியவர்களுக்கு வாசஸ்தலமும்

வசதியு மளிப்பவளென்று முன்னமே யறிந்திருப்பதை நேயர்கள் மறந்திருக்க மாட்டீர்களென்று கருதுகிறோம்.

ஜெகதாள் மாளிகைக்குச் சென்று வண்டியைவிட்டிறங்கியதும் இவள் எஜமானியே யென்று கருதிய வேலைக்காரன் "சீமாட்டியே! பிரபு சற்று நேரத்திற்கு முன்புதான் மாளிகைக்கு வந்து சேர்ந்தார்" என்றான். இதைக் கேட்ட ஜெகதாள் பேரிடி விழுந்தவள்போல் ஒன்றும் தோன்றாது நிற்கவே முடியாமல் தத்தளித்தாள். வேலையாள் அவசரத்தில் அதைக் கவனிக்காது சென்றான். ஜெகதாள் மெது வாய்ச் சமாளித்துக்கொண்டு மேல் மாடிக்கு நடக்கத் தொடங்கினாள்.

வண்டி வந்த சத்தத்தைக் கேட்ட பிரபு தன் மனைவி வந்துவிட்டாளென்று கருதித் தன் அறையை விட்டுப் புறப்பட்டு வந்து செல்கிறவள் தன் மனைவியே யென்றெண்ணி "ஓ! ஏகநாயகி! என்ன நான் திரும்பிவந்ததை யறிந்தும் ஒரு வார்த்தை நல்வரவு கூட கூறாமல் வாய்ப்பேச்சு கூடப் பேசாமலா போகிறாய்?" என்று கூவிக்கொண்டே அவளைப் பின் தொடர்ந்து சென்றார். அவளோ பெருந் திகிலடைந்து அதி துரிதமாய் ஓடிச் சீமாட்டியின் அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு பிரபு என்ன கூறியும் திறக்காமலே யிருந்தாள்.

நேயர்களே துஷ்ட ஸ்திரீகள் செய்யும் படுமோசச் செயல்களுக்கு அளவேயில்லை. அவர்கள் தந்திர சாமர்த்தியங்களுக்கும் ஒரு அளவில்லை. அப்படிப்பட்டவர்கள் முடிவில் இவ்வுலகில் அவமானமும் கஷ்டமு மடைந்து சொல்லொணாத் துன்பங்களை யனுபவித்து பிறகு மறுமையில் எரிவாய் நரகில் வீழ்ந்து எண்ணிறந்த காலம் அவஸ்தைப்படுவார்கள் என்ற உண்மையை நாம்

கூறவேண்டுமே யன்றி இச்சீமாட்டியின் செயல்களை விரித்துக்கூற நமக்குப் பிரியமில்லை. ஆகையால் கதையின் தொடர்ச்சிக்கு அவசியமான வரை சுருக்கமாய்க் கூறுகிறோம்.

அன்றிரவு பிரபு கடைசியில் ஜெகதாள் நுழைந்த அறையின் கதவை யுடைத்துவிடுவதாய்ப் பயமுறுத்தவே அவள் கதவைத் திறந்து "இனி நாம் தப்பமுடியா"தென்று கண்டு பிரபுவின் பாதங்களில் விழுந்துவிட்டாள். ஆனால் பிரபுவின் கேள்விகளுக்கு ஒன்றும் கூறாமல் மௌனம் சாதித்தாள். பிரபு அவள் தன் மனைவியின் உடையை யணிந்திருப்பதாலேயே மிக்க சந்தேகங்கொண்டார். முன்னமே ஒருநாள் இத்தகைய விஷயம் நடந்து அவர் மிக்க அய்யங் கொண்டிருக்கிறா ரென்பதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். இன்று மிக்க சந்தேகமுதித்துத் தன் மனைவியின் கைப்பெட்டியைச் சோதித்தபோது, உலகாம்பாள் சீமாட்டி அவளுக்கெழுதிய ஒரு இரகசியக் கடிதம் அகப்பட்டது. அதில்,

"என் பிரியமுள்ள ஏகநாயகி! உன் கடிதம் கிடைத்தது. ஜெகதாள் மூலமாய் விடை யனுப்புகிறேன். ஆம், மாலை முழுமையும் நான் வீட்டிலேயே யிருப்பேன். வழக்கம்போல் ஜாக்கிரதையாகவே யிருப்பேன். அதைப்பற்றி நீ சற்றும் பயப்படவேண்டாம். ஏகநாயகிச் சீமாட்டியைத் தவிர வேறு ஒருவரையும் உள்ளேவிட வேண்டாமென்று வாயிற் காப்போனுக்குத் திட்டமாய்க் கட்டளையிட்டு வைக்கிறேன். ஆனால் ஜெகதாள் விஷயத்தில் உனக்குப் பூரண நம்பிக்கை யிருக்கின்றதென்று நம்புகிறேன்,

இப்படிக்கு,
உலகநாயகி"

என்று எழுதி யிருந்தது.

இதைக்கண்டதும் பிரபுவிற்கு மிக்க சந்தேகமுண்டாய் விட்டது. உலகநாயகிச் சிமாட்டியும் இவ்விஷயத்தில் உளவா யிருக்கிருள் என்று அவர் புத்தியிற்பட்டது. பிறகு மனைவியின் பெட்டியை யின்னும் சோதித்தபோது அவள் கர்னல் மாரப்பனுக்காகத் தன் கணவனுடைய கையொப் பம் வைத்துக்கொடுத்தக் கள்ளப்பத்திரங்கள் சில அகப்பட் டன. இவற்றைக் கண்டதே பிரபுவின் மனம் பெரிய நரக வேதனை யடைந்தது. இப்போது முன் பின்னிருந்த சந்தே கங்களனைத்தும் உண்மையேயென்று புலப்பட்டது. பிரபு தன் மனைவி மாரப்பனிடம் சினேகம்கொண் டிருக்கிருள் என்று நன்ருயறிந்துகொண்டார். ஆகையால் அப்பத்திரங் களையெல்லாம் எடுத்து முன் அகப்பட்ட கடிதத்தோடு சேர்த்து ஒரே கட்டாய்க்கட்டி வைத்துக்கொண்டார்.

ஆனல் தெய்வ சங்கல்பமாய் அக்கட்டு அப்படியே ஜெகதாள்கையில் சிக்க அவள் உடனே அவற்றைத் தீக் கிரையாக்கிவிட்டாள். பிரபு ஜெகதாளை அவளிருந்த தன் மனைவி யறையிலேயே இருக்கவைத்து அந்த அறையைப் பூட்டிக்கொண்டு சென்ருர். ஜெகதாள் சாளரத்தின் வழி யாய்க் கயறுகட்டி யிறங்கித் தன் எஜமானியிருக்கும் கௌரி வீட்டிற்குச்சென்று பிரபு திரும்பி வந்துவிட்டதையும் நடந்த சங்கதிகளையும் யாவும் விவரமாய் ஏகநாயகியிடம் கூறினள். பிறகு இருவரும் தந்திரமான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு ஒருவர்பின் ஒருவராய் மாளிகைக்கு வந்துசேர்ந்தார்கள். தன்னிடமிருந்த அத்தாட்சிகள் போய்விட்டதை யறியாத பிரபு தன் மனைவியின்மேல் குற்றம்சாட்டிப் பிறகு அத்தாட் சிகளைக் காட்டுகிறேன் பார் என்றுகூறி அந்த அத்தாட்சிக ளைக் காணுததால் தலைநாண வேண்டியதாயிற்று. அச்சம யம் சிமாட்டி தான் மகா உத்தமிபோலும் பிரபு தன்மேல்

அபாண்டமான பழிசுமத்திவிட்டதாகவும் பிரமாதமாய்ச் சலித்துக்கொண்டாள். பிரபு என்செய்வார். இத்துஷ்ட ஸ்திரீகள் தங்கள் தந்திரசாமர்த்தியத்தால் தன்னை ஏமாற்றிவிட்டார்களென்று அவர் மனதில் நன்ருய் விளங்கிவிட்டது. அச்சமயம் அவர்கள் ஆசாரப்படி பிரபுவே மனைவியை மன்னுப்பு கேட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று.

இவர்களிடம் நாம் எப்படி ஏமாந்துவிட்டோமென்பது அவருக்குச் சற்றும் விளங்கவில்லை. ஆயினும் தன்னிடமிருந்த பத்திரங்கள் எப்படியோ இவர்களிடமே சிக்கிக்கொண்டதென்றும், தாங்கள் நம்மை ஏமாற்றி முட்டாளாக்கிவிட்டதை யவர்கள் உணர்வார்களென்றும் அவர் நன்குணர்ந்தார். கர்னல் மாரப்பன் தன் மனைவியின் கள்ளக்காதலனென்று அவர் நன்ருயுணர்ந்தார். அவனுடைய கடன் பத்திரங்கள் வேலப்பனிட மிருக்கின்றனவென்று அவர் அறிவார். ஆகையால் அவனை விசாரித்தால் எவ்வளவு தொகைக்கு நம் கையொப்பம்வைத்து கள்ளப்பத்திரங்கள் சிருஷ்டிக்கப்பட் டிருக்கின்றனவென்று நாம் அறிந்துகொள்ளலாம் என்று சிந்தித்தார். ஆனல் தாகிரி வேலப்பனுக்கும் தன் மனைவிக்கும் நேசமுண்டென்பதை யவர் கனவிலும் நினைத்தவரல்ல. முதலாவது அவர்களிருவர்க்கும் அறிமுகமுண்டென்பதுகூட அவருக்குத் தெரியாது. ஒரு சமயம் கர்னல் மாரப்பனுக்கும் தன் மனைவிக்கும் நேசமுண்டென்றதும், அப்பத்திரங்கள் கள்ளக் கையொப்ப மிடப்பட்டவையென்றும் வேலப்பன் அறிவானு? அப்படியாயின் இவ்விஷயத்தைப்பற்றி அவன் எவ்வளவுதூரம் அறிவான்; இதை நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்பது அவர் எண்ணம். ஆகையால் மறுநாள் காலைப்போஜனம் அருந்தியதும் குதி

மைமேல் ஏறிக்கொண்டு தன் காலாளை யழைத்துக்கொண்டு குமாரவேல்பிரபு வேலப்பன் மனையைநோக்கிச் சென்றார்.

வேலப்பன் அச்சமயம் தன் அறையில் உட்கார்ந்து கொண்டு இரவு நடந்த சங்கதிகளைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். இரவு தானும் ஏகநாயகியும் கௌரி வீட்டிலிருந்தபோது ஜகதாள்வந்து தன் எஜமானியிடம் கூறிய யாவும் அவன் அறிவான். அதாவது பிரபு பருதிபுரத்திலிருந்து திரும்பி வந்துவிட்டாரென்றும் கள்ளப்பத்திரங்களைப் பார்த்துவிட்டாரென்றும் மிக்க கலவரத்தோடும் அவசரத்தோடும் ஏகநாயகி யவனிடம் கூறியிருக்கிறாள், ஆகையால் ஒருசமயம் பிரபு தன்னிடம்வந்து மேற்படி பத்திரங்களைப்பற்றி கேட்டால் அதற்கெப்படி தந்திரமான விடையளிப்ப தென்பதைப்பற்றி இரவே அவசரத்தோடு அவசரமாய் அவர்களிருவரும் கலந்து பேசிக்கொண்டார்கள்.

அப்படியிருந்தாலும் பிரபுவுக்கு அதைப்பற்றிய விஷயம் எவ்வளவுதூரம் தெரிந்துவிட்டிருக்கிறதோ, அதனால் எத்தகைய பிரமாதம் விளையக்கூடுமோ, தனக்கு அதன் சம்பந்தமாய் எவ்வளவு ஆபத்துநேரிடக்கூடுமோ, இது விஷயத்தில் பிரபு எவ்வளவு வஞ்சத்தோடு எவ்வளவுதூரம் விவகாரம் நடத்தத் தீர்மானித்திருக்கிறாரோவென்று வேலப்பன் பெருந்திகிலடைந்து ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான்.

பிரபு அவன் எதிரிற் சென்றதும் புன்னகையோடு தன் கரங்களை நீட்டினார். இதைக் கண்டதே வேலப்பன் இரவு நடந்த சம்பவங்கள் எப்படி முடிந்ததாயினும் பிரபுவுக்கு நம்மேல் சந்தேக மில்லையென்று எண்ணிக்கொண்டான்.

பிரபுவும் அவனும் சற்றுநேரம் பொது விஷயங்களைப் பற்றி பேசியதும், பிரபு "வேலப்பா! நான் இரண்டு மூன்று மாதங்கட்கு முன் உன்னிடம் வந்திருந்தபோது நீ சில பத்திரங்களைப்பற்றி கூறினாய். அப்போது நான் யாருக்கும் அம்மாதிரி ஜாமீன் கையொப்பம் வைக்கவில்லை யென்று கூறினேன். அச்சமயம் நீ யதை நம்பவில்லையல்லவா?" என்றார்.

வேலப்பன்:—"ஆம் பிரபுவே! அச்சமயம் தாங்கள் ஜாமீன் கையொப்பம் வைத்த பத்திரங்கள் ஐயாயிரம் சவரனுக்கு என் மேஜையில் இருந்தது" என்றான்.

இதைக் கேட்ட பிரபு தான் எண்ணிவந்தபடி தன் பெயர் வைத்து கள்ளக் கையொப்பமிட்ட பத்திரங்கள் இவ்வளவு தொகைக்கு இருக்கின்றனவென்று தெரிந்ததைப் பற்றி உள்ளத்தில் சந்தோஷ மடைந்து, வேலப்பனை நோக்கி,

"சரி இப்போது அவை கள்ளக் கையொப்பம் வைக்கப் பட்டவை யென்று நீ அறிந்துகொண்டிருப்பாய் என்று நம்புகிறேன்" என்றார்.

வேலப்:—"ஆம் பிரபுவே தெரிந்துகொண்டேன். அந்தக் கள்ளப் பயலாகிய கர்னல் மாரப்பன் என்பவனே கள்ளக் கையொப்பம் வைத்து அவற்றைப் பிறப்பித்தவன்" என்றான்.

ஏனெனில் ஏகநாயகிச் சீமாட்டி தன்னிடம் அக்கள்ளப் பத்திரங்கள் இருந்து அவை பிரபுவிடம் சிக்கிக்கொண்டது முதலிய எல்லா சங்கதிகளையும் கூறியிருக்கிறாள். இவன் அதற்குத் தக்கபடி தோதாக எம்மாதிரி கதை கட்டிவிட வேண்டுமென்பதைப் பற்றி இருவரும் முன்பே ஆலோசனை

செய்துகொண் டிருக்கிறார்கள். அதன்படியே அவன் இப் போது பேசத் தொடங்கினான்.

பிரபு அவன் மொழிகளைக் கேட்டு வியப்புற்று, "என்ன கர்னல் மாரப்பனு கள்ளக் கையொப்பம் வைத்தான். அவன் அப்பத்திரங்களை யுன்னிடம் கொண்டுவந்து கொடுத்திருக்க லாம். ஆனால் அதனாலேயே அவனே கள்ளக் கையொப் பம் வைத்தானென்பது எப்படியோ எனக்கு விளங்கவில்லை" என்றார்.

வேலப்:—"பிரபுவே இந்த விடத்திலேயே அவன் தன் குற் றத்தை யொப்புக்கொண்டான். அதன்பேரில் நான் நமது நாட்டுச் சட்டப்படி கள்ளக் கையொப்ப குற்றத் திற்காக மரண தண்டனைக் குள்ளாக்காமல், அவனைச் சாதாரண கடன்காரன் போலாக்கிச் சிறையில் பிடித்து வைத்திருக்கிறேன். அதன்மேல் அப்பத்திரங்களை யெல் லாம் எடுத்துக்கொண்டு தங்களைக் காணவந்தேன். தாங்கள் அச்சமயம் மாளிகையில் இல்லையாதலால் சீமாட்டியைத் தரிசித்து அவர்களிடம் நடந்த சங்கதி யைக் கூறிப் பத்திரங்களை யளித்து தங்களிடம் அளிக் கும்படி வேண்டிக்கொண்டேன். அந்தம்மாள் இச் சங்கதி தங்கள் மனதிற்கு மிக்க வியாகூலத்தை யுண் டாக்கு மாதலால் இதைத் தங்களுக்கு எப்படிக் கூறுவ தென்று மிக்க விசனப்பட்டார்கள். பிறகு தங்களுக் குச் சமயோசிதம் பார்த்து சங்கதியை வெளியிடுவ தாய்க் கூறினார்கள். நான் இவ்வளவு கூறியதே போது மென்று வந்துவிட்டேன். அப்பத்திரங்கள் இன்னும் தங்களிடம் வரவில்லையாதலால் தங்களுக்கு அதைப் பற்றி இன்னும் விளங்கவில்லை" என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட பிரபு விஷயங்கள் இம்மாதிரி திரும்பியதைப்பற்றி மிக்க கலவரமும் வியப்பு மடைந்து, தன் மனக்குழப்பம் யாவும் மனதில் அடக்கிக்கொண்டு, வேலப்பனை நோக்கி,

“அப்படித்தான் இருக்கவேண்டும்” என்று கூறிவிட்டு விடைபெற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார். அவ்வளவிற்கும் வேலப்பனுக்கும் தன் மனைவிக்கும் நட்பிருக்கிறதென்று அவர் மனதிற் சற்றேனும் புலப்படவே யில்லை. அவர் வேலப்பன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு வீதியின் வழியாய்ச் சற்றுதூரம் செல்லும்போது நாணயமாய் உடையணிந்த ஒரு வாலிபன் அவரைச் சந்தித்து மரியாதையாய் வந்தனமளித்தான். பிரபு அவனைக் கண்டதும் தனக்கு அறிமுகமான ஆள் என்றுமட்டும் தெரிந்துகொண்டார்.

அவ்வாலிபன் அவரை நோக்கி “பிரபுவே நான் தங்களுக்கு எச்சரிக்கை செய்யத் துணிந்ததைப்பற்றி என்னை மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன். இக்கள்ளப் பயலாகிய வேலப்பனிடம் தாங்கள் ஏதாவது விவகாரம் வைத்துக் கொள்வதாயின் மிக்க ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்” என்றான்.

பிரபு:—“நீ யார்? நான் உன்னைப் பார்த்திருக்கிறேன்” என்றார்.

வாலிபன்:—ஆம்; பார்த்திருக்கிறீர்கள். நான் அந்த வேலப்பன் இடத்திலேயே தொழில் செய்து கொண்டிருந்தவன்.

பிரபு:—ஆ! தெரிகிறது. தெரிகிறது. ஓ! உன் பெயர் விஸ்வநாதன் அல்லவா? உன் விஷயங்களைப்பற்றிப் பத்திரிகைகளில் கண்டிருக்கிறேன்.

விஸ்வநாதன்:—உலகத்தில் மேல் பார்வைக்கு நான் கள்ளக் கணக்கு எழுதி மோசம் செய்ததாகத் தோன்றினும் இந்தக் கள்ளப் பயலாகிய வேலப்பன் தூக்கில் போடத் தக்கக் குற்றங்கள் பலவற்றைச் செய்திருக்கும் அக்கிரமஸ்தனாகிய கொடிய சண்டாளனென்று நான் சத்தியமாய் உண்மை யத்தாட்சிகளைக் கொண்டு ருசுப்படுத்துவேன்.

பிரபு:—ஆ! நாம் இங்கே பேசலாகாது. அடுத்தாற்போலிருக்கும் ஹோட்டலுக்கு வருகிறாயா? நான் உன்னிடம் பேசவேண்டிய சங்கதிகள் மிக்க விருக்கின்றன.

விஸ்வ:—தயவுசெய்து மன்னிக்கவேண்டும் பிரபுவே. நான் இப்போது துரைத்தனத்தாரால் பூரண மன்னிப்படையப் பெற்றிருக்கிறேன். முதலாவதாய் எனக்குக் கொடிய துரோகமும் அக்கிரமமும் செய்த சண்டாளனாகிய இவனிடம் முன்னே சென்று இவன் அக்கிரமங்களை யிவன் முகத்தின்முன் கூறவேண்டும். அவன் மேல் நான் தீர்த்துக்கொள்ள வேண்டிய வஞ்சத்திற்கு இதுவே முதல் ஆரம்பம்.

பிரபு:—அப்படியாயின் நீ என்னை வந்து காண்கிறாயா?

விஸ்வ:—ஆகா! கட்டாயம் தங்கள் மாளிகையில் வந்து காண்கிறேன்.

அதன்மேல் பிரபு தன் குதிரைமேல் ஏறிக்கொண்டு நேராய் இளவரசன் மாளிகைக்குச் சென்றார்.

மதனவல்லிச் சீமாட்டியைக் காணவேண்டு மென்பது அவர் நோக்கம்.

85-வது அத்தியாயம்

மதனவல்லியின் வலையில் இளவரசன் சிக்கியபின் நாளடைவில் இளவரசன் துரைத்தன விஷயங்களில் கூட அவள் பிரியப்படி நடக்கத் தொடங்கிவிட்டான். குமாரவேல் பிரபு அவளைக் காணச் சென்றபோது அவள் இளவரசனுடு சம்பாஷணை செய்துகொண் டிருந்துவிட்டு பத்து நிமிடங்களுக்கு முன்புதான் தன் அறையிற் சென்று உட்கார்ந்தாள். தோழி வந்து அப்பிரபுவின் வரவைக் கூறியதே அவள் "ஆ! அப்பிரபு பருதிபுரத்திலிருந்து வந்துவிட்டார்" என்று தனக்குள் கூறிக்கொண்டே அவரை யுடனே உள்ளே யழைத்துவரும்படி கட்டளையிட்டாள்.

பிரபு உள்ளே வந்தபிறகு அவரும் மதனவல்லியும் சுமார் ஒருமணி நேரம் இரகசியமாய்ப் பேசிக்கொண் டிருந்தார்கள். அவர்கள் சம்பாஷணை யின்ன விஷயத்தைப் பற்றியதென்று நாம் இங்கு கூறவேண்டியதில்லை. ஆனல் அவர்கள் சம்பாஷணை காதலைப்பற்றிய தல்லவென்று மட்டும் நாம் திட்டமாய்க் கூறலாகும்.

பிரபு விடைபெற்றுக்கொண்டு அம்மாளிகையை விட்டுச் சென்ற சற்றுநேரத்திற்குள் சூரியநாயகம் பிரபு அங்கு வந்தார். இப்பிரபுதான் மதனவல்லி மூலமாய் விஸ்வநாதனுக்கு முழு மன்னுப்புக்கிடைக்கும்படி செய்தவர் என்பதை நேயர்கள் மறந்திருப்பீர்களென்று நாம் நினைக்கவில்லை அமிர்தாம்பாளுக்கு நேரிட்ட ஆபத்துகளையும் அவள் இறந்து போனதாய்க் கருதப்பட்ட விஷயத்தையும் தனக்கு நேர்ந்த ஆபத்துகளையும் யாவற்றையும் சூரியநாயகம் பிரபு மதன

வல்லியிடம் வந்து கூறி ஒருவாா மாயிற்று. அமிர்தாம்பாள் மறுபடி உயிர்பெற்ற சங்கதி மதனவல்லிக்கு இன்னும் தெரியாது.

பிரபு அவளைக்கண்டதும் "நான் இடையில் வாாதிருந்ததைப்பற்றி நீ வியப்படைந்திருப்பாயென்று நான் கருதுகிறேன்" என்றார்.

மதனவல்லி, "ஆ! தங்கள் மாளிகை தீக்கிரையானதைப்பற்றி கேள்விப்பட மிக்க விசனிக்கிறேன். ஆனால் ஒன்று. தங்களுக்குக் கடவுள் செல்வத்தையளித்திருக்கிறார்; அது ஒருவித ஆறுதல். அதோடு தாங்கள் அவ்வளவு ஜீவகாருண்யத்தோடு காப்பாற்றிய அப்பரிதாபமான கன்னிகை கடைசியில் மாணமடைந்தது பெரிய துக்க சம்பவம். அதிலும் அவள் தங்களுயிரைக் காப்பாற்றியவள்" என்றாள்.

அதன்மேல் அப்பிரபு அமிர்தாம்பாள் உயிர்பெற்றெழுந்த ஆச்சரியமான விஷயத்தைப்பற்றி விபாமாய்க்கூறினார். இதைக்கேட்ட அம்மாது இப்போது அவள் எங்கிருக்கிறாள் என்று விசாரித்தாள். சூரியநாயகம் பிரபு,

"அவள் கொஞ்சகாலம் சுகசிங்கம் பிரபுவின் வீட்டில் இருக்கவேண்டுமென்றுதான் எங்கள் எண்ணம்; ஆனால் அந்த விடத்தில் அவள் அந்தப் பிரபுவால் அடைந்த இக்கட்டுகளால் அவள் மனம் அங்கிருக்க விரும்பவில்லை. ஆகையால் அவளை வேறு தனியான விடத்தில் இருக்கச் செய்வதே நலமென்று கருதி ஒரு நிம்மதியான விடத்தில் கொண்டுபோய் விட்டிருக்கிறார்கள். அவளுடைய சகோதரன் அவள்கூடவே யிருக்கிறான்" என்றார்.

அதன் பிறகு இருவரும் சற்றுநோம் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் வேலைக்காரி வந்து மதனவல்லியை நோக்கி,

"அம்மா! சுகசிங்கம் பிரபு வந்திருக்கிறார். தங்களிடம் ஏதோ முக்கியமான விஷயத்தைப்பற்றி யுடனே பேச வேண்டுமாம்'' என்றாள்.

மதனவல்லி சூரியநாயகம் பிரபுவை நோக்கி, "தாங்கள் எனக்குப் பழைய நண்பரானதால் நான் ஒருவாறு இந்த சுகசிங்கம் பிரபுவின் கையில் சிக்கிக்கொண் டிருக்கிறேன் என்பது தங்களுக்கு நன்றாய்த் தெரியும்'' என்றாள்.

சூரியநாயகம் பிரபு:—"ஆம். நீ கூறுவதன் கருத்து இன்னதென்று தெரிந்துகொண்டேன். ஆனால் நீ யவனிடம் சிக்கொண் டிருப்பதைவிட தற்சமயம் அப்பிரபு என்னிடம் சிக்கிக்கொண் டிருக்கிறான். அவன் உனக்கு ஏதாவது தொந்திரை கொடுப்பதாயின், நான் இப்போது உனக்கு உதவி செய்யக்கூடும்'' என்றார்.

மதனவல்லி:—"உமக்கு மிக்க வந்தனம் செய்கிறேன். இப்போது நான் அவரைக் கண்டுதானே தீரவேண்டும்?'' என்றாள்.

சூரியநாயகம்:—சரிதான். ஆயினும் ஒரு சமயம் அவன் இப்போது ஏதோ சாதாரண விஷயமாக வந்திருக்கலாகும்.

மதன:—"இல்லை யில்லை. எனக்கு நன்றாய்த் தெரியும். அவன் சிநேகபாவமாய் வந்தவனல்ல. என்னை பயப்படுத்தி ஏதோ தன் சுயகாரியத்தை முடித்துக்கொள்ளவே வந்திருக்கிறான். அவன் அக்கிரமமாய்க் கற்பழிக்க நினைத்த அப்பரிதாபமான கன்னிகை தன் கையிலிருந்து தப்பித்துக்கொண்டு போனதோடு அவளை மறந்துவிட அவனுக்கு மனம் வாராது. மறுபடி யவளை யெப்படியாவது தன் வலையில் சிக்கவைக்

கவே முயற்சி செய்வான். அவனுடைய கொடிய சுபாவம் அத்தகையது'' என்ருள்.

சூரியநாயகம்:—"அப்படியானல் ஒன்று செய். நீ யவனை யிந்த அறைக்கே வரச்செய்து பேசு. ஆனல் நானும் மறைவா யிருந்து அவன் கூறுவதைக் கேட்கட்டும்'' என்ருர்.

அவ்வாறே அப்பிரபு அங்கிருந்த திரை மறைவில் பீரோ வின்பின் மறைந்துகொண்டார்.

வெளியில் நின்றிருந்த அவளுடைய தோழி அவள் இரகசியங்களை யெல்லாம் அறிந்தவளாதலால் இவர்கள் சம் பாஷணை முழுமையும் கேட்டபின் பேசாமல் சென்று சுக சிங்கம் பிரபுவை யுள்ளே செல்லும்படி யனுப்பினுள்.

அப்பிரபு வந்தவுடனே மதனவல்லியை நோக்கித் தன் துஷ்ட சுபாவத்தின்படிக் காதல் சங்கதியையே பேசத் தொடங்கினர்.

இதைக் கேட்ட மதனவல்லி மிக்க மனவருத்தமும் கோபமுமடைந்து அப்பிரபுவைநோக்கி "இதற்காக வந்தவர் தாஞ ஏதோ மிக்க அவசரமான வேலை யிருப்பதாகக் கூறி னீர். ஏதோ அசந்தர்ப்பத்தால் ஒருவர் தன் கையில் சிக்கிக்கொண்டால் அவர்கள் மனப்பிரியத்திற்கு மாருக அவர்களைத் தொந்திரவு செய்வதுதாஞ தங்களைப் போன்ற பிரபுக்களுக்கு ஒழுங்கு?'' என்ருள்.

பிரபு மனதில் வெறுப்பும் கோபமு மடைந்து "ஆ மதனவல்லி! என் பிராணன் போவதாயினும் என் மனப் பிரியப்படி என் காதலை நான் எப்படியும் திருப்தி செய்துக் கொண்டுதான் தீர்வேன். அன்று என் மாளிகையில் அந்த எந்திர நாற்காலியில் நீ யென்னைச் சிக்கவைத்துவிட்டு செய்த

அவமானத்தை நான் மறக்கவில்லை. அந்த வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வதோடு என் காதலையும் நான் நினைத்த போது தீர்த்துக்கொள்வேன்'' என்றார்.

இம்மொழிகளைக் கேட்ட மதனவல்லி இவனை யவமானப்படும்படி பேசவேண்டுமென்று ஆத்திரங் கொண்டாள். மறுபடி தன் மனக்கொதிப்பை யடக்கிக்கொண்டு,

''சரி அதெல்லாம் இருக்கட்டும். இப்போது நீர் வந்த காரியத்தைச் சுருக்கமாய்க் கூறிவிடும்'' என்றாள்.

சுகசிங்கம் பிரபு:—''அப்படியே கூறுகிறேன். நாளை இரவு நானாவது இங்கு சயனத்திற்கு வரவேண்டும். அல்லது நீயாவது நாளை யிரவை யென் மாளிகையில் கழிக்கவேண்டும்'' என்றார்.

மதனவல்லி சற்றுநேரம் சிந்தித்து ''நானே நாளை யிரவு பத்து மணிக்குமேல் தங்கள் மாளிகைக்கு வருகிறேன்'' என்றாள். அதன்மேல் பிரபு வேறொன்றும் கூறாது விடைபெற்றுச் சென்றார்.

நேயர்களே! இச்சந்தர்ப்பத்தில் நாம் ஒரு விஷயம் கூறக் கருதுகிறோம். அதாவது சிலர் தீர்க்காலோசனை செய்யாமல் இத்தகைய அக்கிரமக் காதல் விஷயங்களைப் பற்றிக் கூறும் நாவல்கள் தகுதியானவை யல்லவென்று கருதிவிடுவார்கள். அது தவறென்றே நாம் திட்டமாய்க் கூறுகிறோம். துர்நடக்கைகளின் பயனை நன்கறிந்தால்தான் ''சே அதில் பிரவேசிக்கலாகாது'' என்று மனதிற்கு வெறுப்புண்டாகும். தன் நெறியில் தவறியதால் மதனவல்லி யனுபவிக்கும் கஷ்டங்களை யுணரும் மாதர்களும், அப்பிரபுவின் துர்நடக்கைகளை யுணரும் ஆடவரும் அவர்களையும் அவர்கள் நடக்கைகளையும் வெறுப்பார்கள் என்பது நிச்சயம்.

சிலர் இத்தகைய விஷயங்களை வாசிப்பதால் சிலர் கெட்டுப் போகிறார்கள் என்று கருதுகிறார்கள். துர்கடக்கைகளைக் கண்டித்துக் கூறும் நாவல்களை வாசிப்போர் ஒருகாலும் இதனால் கெட்டுப் போகமாட்டார்கள் என்பது உண்மை.

சுகசிங்கம் பிரபு சென்றவுடனே சூரியநாயகம் பிரபு தன் மறைவிடத்திலிருந்து வெளியில் வந்து மதனவல்லியை நோக்கி "இத்தகைய கொடிய துஷ்டனிடம் இவ்வளவு பொறுமை காட்டியது அனுவசியமே. ஆயினும் இருக்கட்டும். நாளை யிரவு நீ வாக்களித்தபடி கட்டாயம் அச்சண்டாளனுடைய மாளிகைக்குச் செல். நீ யுள்ளே சென்ற சற்றுநேரங் கழித்து நான் வந்து கதவைத் தட்டுகிறேன். என்னை யுள்ளே விடாவிட்டால் கதவை யுடைத்துவிட்டாயினும் பிரவேசிப்பேன். பிறகு நான் அவனைச் சந்தித்துப் பேசுவதால் அவன் மறுபடி உன் அறைக்கும் உன் சோலிக்கும் வரவொட்டாதபடி செய்துவிடுகிறேன் பார்" என்றார்.

மதன:—"ஆ! இவ்வளவு மட்டும் தாங்கள் செய்தால் இந்நன்றியை யான் ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்றாள்.

சற்று நேரத்திற்குள் சூரியநாயகம் பிரபு விடைபெற்றுக்கொண்டு அரண்மனையை விட்டுப் புறப்பட்டார். ஆனால் அவர் அக்கட்டிடத்தைக் கடந்து தோட்டத்தில் பிரவேசிக்கும் வாயிற்படி யருகிற் செல்லும்போது அவர் மனதில் ஒரு சிந்தனை யுதித்தது. அதாவது "அடடா! நாம் இங்கு வந்து மதனவல்லியைக் கண்டு செல்லும்போது, இளவரசனைக் கண்டுகொள்ளாமற் போவது நன்றாயிராது. நாம் இங்கு வந்து சென்றதை யவன் அறிந்தால் ஏதாவது தவறான கருத்துகொள்வான்" என்று சிந்தித்தான்.

சூரியநாயகம் பிரபு இளவரசனுடைய நெருங்கிய நண்பன். அவனுடைய இரகசியங்களை யெல்லாம் அறிந்தவன். இச்சங்கதி நமது நண்பர் அறிந்த விஷயமே. ஆகையால் நாம் இளவரசனைக் கண்டுகொண்டே போகவேண்டுமென்று சூரியநாயகம் பிரபு தீர்மானித்துக் கொண்டார். ஆகையால் அங்கிருந்து திரும்பி மாளிகையில் இளவரசனுடைய அந்தரங்க அறைகள் இருக்கு மிடத்தை நோக்கிச் சென்றார்.

இளவரசனுடைய இரகசிய அறைகளின் அலங்காரங்களையும் அமைப்பையும் பற்றி நாம் முன்னமே கூறி யிருக்கிறோம். சூரியநாயகம் பிரபு அங்கு சென்று பார்த்தபோது இளவரசன் அங்கில்லை. இனி யென் செய்வது. நாம் திரும்பிச் செல்வோம் என்றெண்ணி அவ்வறைகளைக் கடந்து தோட்டத்தில் நுழையும் ஒரு இரகசிய வழியிலிருக்கும் கண்ணாடிக் கதவுகளையுடைய அறையருகிற் சென்றார். இளவரசன் அவ்வழியாய் தோட்டத்திலுள்ள ஒரு மறைவிடத்தில் சென்று தனக்குப் பிரியமான நெறிதப்பிய மாதரோடு கேளிக்கையா யிருப்பது வழக்கம். இந்த விஷயம் சூரியநாயகம் பிரபுவிற்கு அனுபவமாய்த் தெரியுமாதலால், ஒரு சமயம் இளவரசன் தோட்டத்திலிருப்பான், ஆகையால் நாம் இங்கு சற்றுநேரம் தங்கியிருந்து பார்க்கலாமென்று நினைத்து அங்கு நின்றார்.

பத்து நிமிடங்களில் தோட்டத்திலிருந்து வரும் வழியாய் இளவரசனும் அவன் பின்னால் இன்னொரு மனிதனுமாய் முன் அறைக்குள் நுழைந்தார்கள். பிரபு உடனே தட்டென்று மறைந்துகொண்டு கண்ணாடி வழியாய் உற்று நோக்கினார். இளவரசன் கூடவந்தவன் துரைத்தனக்

கொலையாளியாகிய தானப்பனே யென்று கண்டதும் அவருக்குண்டான ஆச்சரியத்திற்கு ஓர் எல்லையேயில்லை.

அச்சமயம் தானப்பன் நாணயமாய் உடையணிந்து கொண்டிருந்தான். பிரபுவுக்கு அவன் யோக்கியதை யாவும் நன்றாய்த்தெரியும். ஆகையால் அப்படிப்பட்டவனிடம் இளவரசனுக்கு என்ன சம்பந்தமிருக்கிறது என்று பிரபு கலவரமடைந்து இதன் விஷயத்தை யறியவேண்டுமென்று ஆவல் கொண்டார். இளவரசன் அவனோடுகூட வந்தபோதிலும் தனக்குள் வெறுப்பும் கோபமும் பூரணமாயுடைத்தாயிருக்கிறான் என்று அவன் முகக்குறியால் பிரபு தெரிந்துகொண்டார்.

இருவரும் அறைக்குள் வந்ததே இளவரசன் அதன் கதவை மூடிக்கொண்டு தானப்பனை நோக்கி,

"ஓ மனிதனே இனி ஆலசியமின்றி நீ வந்த காரியமென்னவென்பதை யுடனே கூறிவிடு. நான் எத்தகைய வியப்போடு உன்னை யிங்கு ஏற்றுக்கொண்டேனென்பதை நீ யொருவாறு உணர்ந்திருக்கலாகும்" என்றான்.

தானப்:—"மகாராஜா! இப்படி துரிதப்படுத்தினால் நான் மிக்க தடுமாற்றமடைவேன். என் சுபாவப்படி பேசினால்தான் என் மனதிலிருப்பதை யொருவாறு வெளியிடலாகும்" என்றான்.

இளவரசன் வெறுப்போடு "சரி சரி, உன் பிரியப் படிக்கே கூறு. நான் பொறுமையோடு கேட்கிறேன்" என்றான்.

தானப்:—மகாராஜா! இப்போது சில தினங்களுக்குமுன் நடந்த விஷயத்தைப்பற்றி நான் கூறவேண்டும். அன்று சுகசிங்கம்பிரபுவின் மாளிகையில் இரகசிய

அறையிலிருந்த எந்திர நாற்காலியில் சிக்குண்டு கிடந்த போது தாங்களும் சுகசிங்கம்பிரபுவின் சகோதரர் புதல்வியாகிய தெய்வயானைச் சீமாட்டியும் என்னைச் சந்தித்தீர்கள். அப்போது ஒரு விஷயத்தைப்பற்றி என் உதவியைக் கோரினீர்கள். அதாவது தெய்வ யானைச் சீமாட்டியின் கணவனாகிய தேவராயன் என் பவரைத் தூக்கிற்போடும்படி தண்டனை விதித்திருந்த போது அவனுக்காக மன்னுப்பு கிடைக்கும்படி செய்ய சகல முயற்சிகளும் நடந்துகொண் டிருக்கின்றன வென்று கடைசிவரையில் அவர் நம்பும்படிச் செய்து கடைசி வேளைமட்டுந் தந்திரமாய் அவரை ஏமாற்றும் படி கேட்டீர்கள்'' என்று நண்பர்கள் முன்னமேயறிந் திருக்கும் அந்த இரகசியங்களையெல்லாம் விவரமாய்க் கூறினன்.

இளவரசன்:—“சரிசரி! இந்தப் பழைய கதைகளையெல்லாம் இப்போது ஏன் படிக்கிறாய்?'' என்றான்.

தானப்:—“நான் அத்தகைய முக்கியமான உபகாரம் செய் திருக்கிறேன் என்று நினைப்பூட்டவே கூறுகிறேன்'' என்றான்.

இள:—“நான் அதை மறுத்துக் கூறவில்லையே. அதற்காக அப்போதே 200-பவுன் என் வேலைக்காரன் மூலமாய் அனுப்பினேனல்லவா'' என்றான்.

தானப்:—அது உண்மையே. ஆனால் நான் செய்த அத் தகைய உதவிக்குத் தாங்கள் கொடுத்த பரிசு சற்றும் ஈடல்ல. ஏனெனில் தாங்கள் ஒரு வர்த்தகன், உத்தி யோகஸ்தன் முதலிய சாதாரண மனிதர்களாயிருந் தால் பாவாயில்லை. ஏக சக்ராதிபதியாயிருக்கும் நமது

நாட்டரசர் அத்தகைய உதவிக்கு அவ்வளவு சொல்பத் தொகையைப் பரிசாயளிப்பது மிக்க அகௌரவமாயிருக்கிறது.

இள:—அப்படியாயின் நீ வந்தது பணத்திற்காகவே.

தானப்:—ஆம். நான் கொஞ்சம் பணம் சேகரித்துக்கொண்டு வெளி நாட்டிற்குப் போய்விட உத்தேசித்திருக்கிறேன்.

இள:—அப்படியாயின் சந்தோஷமே. உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?

தானப்:—ஏன் தாங்கள் ஐந்தாயிரம் சவான் கொடுப்பது ஒரு பெரிய காரியமல்லவென்று நினைக்கிறேன்.

இள:—"சரி அத்தொகையை யுனக்களிக்கிறேன். ஆனால் இப்போதளிக்க முடியாது. இரண்டொரு நாட்களில் தருவேன். ஆயினும் அது உன்னிடம் எப்படி வந்து சேர்வது? என் வேலைக்காரனை யுன்னிடமனுப்ப முடியாது. நீயும் இங்கு மறுபடி வரலாகாது. ஏனெனில் பார்ப்பவர்களுக்கு சந்தேகம் உண்டாகும்" என்றான்.

தானப்:—"அப்படியானால் தாங்கள் இன்னவேளையில் இன்னவிடத்தில் நான் வந்திருக்கவேண்டுமென்று கூறினால் நான் தவறாமல் அப்படியே நடந்துகொள்கிறேன்" என்றான்.

இள:—"தெய்வயானை இவ்விஷயத்தில் இவ்வளவு தூரம் சம்பந்தப்பட்டிருக்கிறவரையில் இவ்விஷயத்தில் உதவி செய்யவேண்டியவளே" என்றான்.

தானப்:—"ஆகா! தாங்கள் அச்சீமாட்டியிடம் கொடுத்தனுப்பினால் குறித்தவிடத்திற்கு வந்து நான் பெற்றுக் கொள்வேன்" என்றான்.

இள:—"சரி. இன்றைக்கு எட்டாவதுநாள் இரவு பதினேரு மணிக்கு நீ மேற்குப்பாலத்தண்டை யிரு" என்ருன்.

தானப்:—"அப்படியே. இன்னும் திட்டமாய்த் தெரிவதற் காக ஒன்று கூறுகிறேன். அதாவது தாங்கள் யாரை யனுப்பினுலும் சரி நான் அப்பாலத்தில் மத்தியில் இருக்கும் வளேவின்கீழ் இடதுபக்கம் உட்கார்ந்திருப் பேன்" என்ருன்.

இளவரசன் "சரி, இதே ஏற்பாடு; நீ கட்டாயம் இதன் படி நடந்துகொள்வாயென்று நம்புகிறேன். இனி நீவீணுய்க் காத்திராமல் போய்வரலாம்" என்ருன்.

தானப்பன் அவ்வாறே விடை பெற்றுக்கொண்டு செல்ல இளவரசன் கதவைத் திறப்பதற்காக வாயிற்படி வரையில் அவன் பின்னுல் சென்ருன்.

மேல்கண்ட சம்பாஷணே முழுமையும் மறைவிலிருந்து கேட்ட சூரியநாயகம்பிரபு அடைந்த வியப்பும் பிரமையும் சொல்லத்தரமல்ல. இளவரசன் இவ்வளவுதூரம் அந்த அயோக்கியனேடு சம்பந்தப்பட்டிருப்பதை யறிந்ததே யவ ருக்கு வெறுப்பும் வியப்பும் அளவுமீறி யுண்டாய்விட்டது. இதுமட்டுமல்ல. இப்போது நாம் கேள்விப்பட்டவணேத்தும் உண்மையா கனவாவென்று சிந்தித்தார். கடைசியில் அப் பிரபு அங்கிருந்து கிளம்பி மதனவல்லி யிருக்குமிடத்திற்குத் திரும்பினர்.

இவர் சென்றபோது அவள் தன்னறையிலே தனியா கவே யிருந்தாள். பிரபு மறுபடி திரும்பி வந்ததைக்கண்ட மதனவல்லி மிக்க வியப்போடு அவரை நோக்கினுள். பிரபு அவளே நோக்கி,

"நான் ஒரு விசேஷகாரியமாய்த் திரும்பிவந்தேன். அதாவது நாம் முன்புசெய்த ஆலோசனையை மாற்றவேண்டியதாயிருக்கிறது. ஏனெனில் எனக்கு இடையில் சில சங்கதிகள் கிடைத்தது. அவற்றால் நான் சுகசிங்கம்பிரபு உன் விஷயத்தில் பிரவேசிக்கவொட்டாமல் தடுப்பதுமட்டுமல்ல, அவன் திகிலோடு நடுக்கங்கொண்டு உன் முன்பு தலை கவிழ்ந்து விழும்படிச் செய்யும்படியான வல்லமை எனக்குக் கிடைத்திருக்கிறது" என்றார்.

இம்மொழிகளைக் கேட்ட மதனவல்லி "ஓ! தாங்கள் மட்டும் இவ்வளவும் செய்வதாயின் கடவுளறிய நான் உமக்குச்செய்யும் பிரதி நன்றிக்கு ஒரு வரம்பேயிராது" என்றாள்.

பிரபு "நீ சற்றும் ஐயப்படவேண்டாம்" என்றுகூறி சந்தோஷ உபசாரணையோடு விடைபெற்றுச் சென்றார்.

86-வது அத்தியாயம்

நேயர்களே இப்போது நாம் மறுபடி இளவாசனது மாளிகையில் நடக்கும் சில அதிசயமும் நெஞ்சு துடிக்கத்தக்கவையுமான விஷயங்களைக் கவனிக்கவேண்டியதாயிருக்கிறது.

இளவாசனுடைய தங்கையாகிய சுந்தராங்கி என்பவள் அரண்மனையின் இன்னொரு பாகத்தில் வசித்துக்கொண்டிருக்கிறாள். நாம் மேலேகூறிய சம்பவங்கள் நடந்த ஒரு மணிநேரத்திற்குள் மேற்படி இராஜகுமாரியின் ஆள் ஒருவன் இளவாசனிடம் வந்து அவன் தங்கை அவனை யுடனே யவசியம் கண்டுபேச விரும்புவதாய்க் கூறினான். இளவாசன் அவ்வாறே தன் தங்கையின் வாசஸ்தலத்திற்குச் சென்று அவளைக் கண்டான்.

அவள் முகத்தைக்கண்டதே அவள் மனதில் தோன்றிய குறியால் அங்கு ஏதோ மர்மமான சங்கதியும், கலவரமும், ஆவலும் இருக்கிறதென்று இளவரசன் அறிந்துகொண்டான். தான் செய்திருக்கும் தகாத துஷ்டச் செயல்களோடு, தன் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவர் நடக்கையிலும் அவமானத்தை யளிக்கத் தக்க தகாத செய்கைகள் இருக்கின்றனவென்று அவன் நன்கறிவான். எந்த சமயத்தில் எந்த சங்கதி வெளியாய்விடுமோ வென்று அவனுக்கெப்போதும் மனதில் திகிலுண்டு. ஆகையால், தன் தங்கையைக் கண்டதும்,

"தங்கையே ஏதேனும் அதிருப்தியான சம்பவம் நேர்ந்ததோ?" என்றான். தங்கை, "அப்படி யுன் மனதிற்கு வியாகூல மளிக்கத்தக்க விஷயம் ஒன்றுமில்லை. இப்போது நான் உன்னைக் கேட்கப்போகிற ஆலோசனை என் மனச் சந்தோஷத்தைப் பொருத்தியது" என்றாள்.

இள:—ஆயினும் நீ எடுத்ததே யச்சங்கதியைக் கூற அச்சப் படுவதாய்த் தெரிகிறது.

இராஜ கன்னிகை:—அது உண்மையே.

இள:—"சரி! இருக்கட்டும் சங்கதி யென்ன? தெளிவாய்க் கூறு" என்றான்.

இராஜ கன்னிகை கண்ணீர் விட்டுக்கொண்டே "எப்படியாயினும் நான் கூறியே தீரவேண்டும். ஆதியில் முதல் முதல் நடந்த சங்கதியைப்பற்றி யிப்போது பேசவேண்டியதா யிருக்கிறது. அந்த இரகசியம் இதுகாறும் மறைத்து வைக்கப்பட்டே யிருக்கிறதென்பது உனக்குத் தெரிந்த விஷயமே" என்றாள்.

இள:—ஆ பங்கஜம்மாள் மாளிகையில் நடந்தசங்கதிதானே. பங்கஜம்மாள் சீமாட்டி அந்த இரகசியத்தை வெளியிட வில்லையே.

இராஜ குமாரி:—இல்லை யில்லை. அச்சீமாட்டி அப்படிப் பட்டவளல்ல; அவள் மிக்க பெருந்தன்மையும் சத்தி யமு முடையவள்.

இளவரசன் வெறுப்போடு "சரி உன் இரகசியம் பத்திரமாய் மறைக்கப்பட்டிருக்கிற வரையில் உனக்கு வியாகூல மென்ன?" என்றான்.

சகோதரி:—அந்தோ! என் இரகசியத்தைப் பற்றி எனக்கு ஒரு கலவரமுமில்லை. ஆனால் அதன் சம்பந்தமாய் என் மனதில் பெரிய வியாகூலம் உண்டாய்விட் டிருக்கிறது. அடிக்கடி யதுவிருத்தி யடைந்துகொண்டே என் மனதை வாதித்துக்கொண்டே யிருக்கிறது.

இள:—வேறென்ன விஷயத்தைப்பற்றி யுனக்கு இப்போது வியாகூல முண்டாயிற்று?

சகோ:—நான் யாவும் கூறுகிறேன் சற்று பொறுமையாய்க் கேள். மேற்படிசங்கதிநடந்து இப்போதுபத்தொன்பது வருடங்களாயின. சாதாரணமா யுலகில் ஐந்தறிவுடைய மிருகங்களும் இன்னும் பட்சிகளும் கூட தம் சந்ததியிடத்தில் குறித்தகாலம் வரையிலேனும் அன்புவைத்து ஆதரிக்கின்றன. நானோ என் மானம் வெளிவாமல் படி என் பொய்க் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மனித வியற்கைக்கு முற்றும் மாறாக என் மனதை யிரக்கமற்ற கல்மனமா யாக்கிக்கொண்டேன்.

உனக்கு எல்லா சங்கதிகளும் தெரிந்தவைகளே. அந்த ஆபத்து நேர்ந்தபோது எனக்குப் பிறந்த ஆண் குழந்தை

தாமோதரன் என்ற ஒரு வைத்தியரிடம் அளிக்கப்பட்ட சங்கதி நீ யறிந்ததே. நான் கொடுத்த தொகைக்காக அவர் அக்குழவியை வளர்த்து நல்ல வழியில் பயிற்சி செய்து அவன் நாணயமுடைய பெரிய மனிதனுகும்படி செய்ய வேண்டுமென்றும், எக்காரணத்திற்கேனும் அவன் பிறப் பைப்பற்றிய விஷயம் அவனுக்கு எள்ளளவேனும் தெரியும் படி செய்யலாகாதென்றும் ஏற்பாடு. அதோடு என் இரகசி யம் வெளிவாதிருப்பதற்காக, அவர் என்னை யாரென்று அறிந்துகொள்ள முயலலாகாதென்றும், ஒரு சமயம் தற் செயலாய் என்னை வீதிகளிலேனும் வேறெங்கேனும் கண்டு என் அடையாளத்தைத் தெரிந்துகொண்டபோதிலும் அவர் என்னை யறிந்தவர்போல் நடந்து கொள்ளலாகாதென்றும் ஏற்பாடு.

அந்த இரகசியத்தைப்பற்றி யிப்போது எனக்குப் பயம் ஒன்றுமில்லை. ஆனல் அக்குழந்தையின் க்ஷேமத்தைப்பற்றி யறியவேண்டுமென்ற அவா எனக்கு அதிகமாய்விட்டது. அதை யடக்க என்னுல் கூடவில்லை. ஆகையால் பங்கஜம் மாள் சிமாட்டியிடம் சென்று அதைப்பற்றி விசாரிக்கும்படி வேண்டிக்கொண்டேன். அச்சிமாட்டி யவ்வாறே டாக்டர் தாமோதரனிடம் சென்று விசாரித்து வந்தாள்.

இள:—அவள் அந்த டாக்டரிடம் உன் இரகசியத்தைப் பற்றி வெளியிட்டிருக்க மாட்டாளல்லவா?

சகோ:—இல்லை யில்லை. அச்சிமாட்டி யப்படிக் கூறுபவ ளல்ல. அவள் கூறவுமில்லை. அதோடு கூறவேண் டிய அவசியமுமில்லை. ஆனல் டாக்டருக்கு மட்டும் உண்மை தெரிந்துவிட்டே யிருக்கிறது. ஒருநாள் அவர் நான் ஒரு கடையிலிருந்து வெளியில் வந்து வண்டியிலேறும்போது என்னைப் பார்த்து உண்மை

யறிந்துகொண்டார். ஆயினும் அவர் தன் வாக்கின் படி அதை யொருவருக்கும் வெளியிடவில்லை யென்பதும் இப்போது அவர் நகரில் மிக்க பிரபல மடைந்திருந்தாலும் என்னைக் கண்டு பேசக்கூடக் கருதவில்லை யென்பதும் நன்ருய்த் தெரிகிற விஷயங்களே.

இனி அச்சீமாட்டி டாக்டரை விசாரித்து வந்து கூறிய சங்கதியை விளம்புகிறேன். அக்குழந்தையை யவர் வளர்த்து வந்தார். அதற்குச் சுமார் மூன்று வயதிருக்கும்போது ஒருநாள் மாலை அதன் செவிலித்தாய் அதை எடுத்துக்கொண்டு தோட்டத்திற்குள் உலவச் சென்ருள். சற்று நேரம் உலவியபின் அவளும் அக்குழந்தையும் அத்தோட்டத்திலிருந்த ஒரு ஆசனத்தில் உட்கார்ந்திருந்தார்கள். அச்சமயம் ஒரு மனிதனும் ஒரு வாலிபனுமாய் அங்கு வந்து தூாக்கிருதமாய் அக்குழந்தையை யெடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அதை யாரேனும் கண்டு பிடித்துத் தனக்குத் தெரிவித்தால் 5000-ரூபாய் பரிசளிப்பதாக அவர் உடனே விளம்பரம் செய்திருக்கிருர்; அப்போது அவர் பிரசுரம் செய்த அவ்விளம்பரத்தில் சிலவற்றை யிப்போது நான் கண்டேன். அக்குழந்தையின் தகவல் ஒன்றுமே யகப்படவில்லை. இச்சங்கதிகளைக் கேட்ட பங்கஜம்மாள் சீமாட்டி மிக்க வியாகூலத்தோடு திரும்பிவந்தாள். ஆயினும் எல்லா விஷயங்களையும் ஒளிக்காமல் கூறிவிடுவதே நலமென்று கருதி யாவும் கூறினுள். அந்தோ! என் வயற்றில் பிறந்த அக்குழந்தை யிப்போதிருக்கக்கூடிய நிலைமையையும், அது சேர்ந்திருக்கத் தக்க சகவாசத்தையும், அடைந்திருக்கத் தக்க பயிற்சியையும் நினைக்கும்போது அய்யோ என்னைப்போல பரம சண்டாளி ஒருவருமிரார்களென்றே கருதுகிறேன். ஆனுல் மனதிற்கு ஒருவித சமாதானம் ஏற்

பட்டிருக்கிறது. அதாவது, இப்போது டாக்டர் இதைக் கண்டுபிடிக்கும்படி துப்பறியும் தலைவனையே யேற்படுத்தி யிருக்கிறார் என்று தெரிகிறது.

இள:—ஆ! அது செல்வநாதனாகவே யிருக்கவேண்டும். அவன் மிக்க சாமார்த்தியவான். டாக்டர் உன் சங்கதியை அவனிடம் கூறி யிருக்கமாட்டாரே.

இராஜ குமாரி:—"ஒருகாலும் கூறமாட்டார். அவர் அது தன்னுடைய குழந்தையையே யென்று கூறியிருக்கிறார். செல்வநாதன் இதற்குள்ளாகவே அப்பாலன் இப்போது அழகிய வாலிபனாய் உயிரோ டிருக்கிறானென்று கண்டு பிடித்ததோடு அவன் எத்தகைய சகவாசத்தில் பழக்கப்பட் டிருக்கிறானென்றும் நன்றாய்க் கண்டு பிடித்துவிட்டான்" என்றாள்.

அம்மாது இதைக் கூறும்போது மிக்க மனத்துயரடைந்து கண்களில் தாரை தாரையாய்க் கண்ணீர்விட்டாள்.

அதைக்கண்ட இளவரசன் "நீ கேள்விப்பட்ட விஷயம் திருப்திகரமானதா யில்லையென்று நினைக்கிறேன்" என்றான்.

இராஜ கன்னிகை "ஐயோ அதை நினைக்கும்போதே என் மனம் படும் வேதனை கடவுளுக்கே தெரியும்" என்று கூறியதும் சட்டென்று தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு "அந்தோ! நான் என்னென்று கூறுவேன். அவன் வளர்க்கப்பட்ட விடத்தில் உண்டாயிருக்கும் சகவாசத்தால் எவ்வளவு அகௌரவமும், இழிவும், குற்றமுமான நடக்கைகள் உலகிலுண்டோ அவைகளிலெல்லாம் பூரணமாய்ப் பயிற்சி செய்யப்பட்டிருக்கிறான். அயோக்கியமென்னும்

அழுகிய சேற்றில் அடியோடு அமிழ்த்தப்பட் டிருக்கிறன். இதெல்லாம் போதாதென்று அவன் இப்போது ஊழியம் செய்வது எப்படிப்பட்ட மனிதனிடமென்றல்—ஐயோ பெற்ற சண்டாளியாகிய என் அசட்டையாலல்லவோ என் மகன் இத்தகைய நிலையிலிருக்க நேர்ந்தது. அதை யென் னென்று கூறவேண்டு மெனின்—அந்தோ நமது நகரத்தில் மிக்க இழிவான தொழில்செய்பவன் எவனே-எவன் யாவரி லும் இழிவானமனிதனுய் யாவராலும்நீண்டவும்வெறுக்கத் தக்கவனு யிருக்கிறனே அத்தகைய சண்டாளனிடம் ஊழி யம் செய்துகொண் டிருக்கிறன்" என்றுள்.

இள:—யார் அவன்? எந்த மனிதனிடம் அவன் இப்போ திருக்கிறன்?

சகோ:—வெறுப்பான முகக்குறியோடு இளவாசனை யுற்று நோக்கி "எந்த மனிதனிடமா? அத்தகைய மனிதன் யார்? இராஜாங்கக் கொலைகாரன்தான்" என்றுள்.

இதைக் கேட்ட இளவரசனுக்கு மிக்க வெறுப்பும், கல வரமும் உண்டாயிற்று. ஏனெனில் தான் அவனேடு பேசி இன்னும் ஒருமணி நேரங்கூட ஆகவில்லை. இத்துஷ்டன் ஏன் நமது விவகாரங்களில் இடையிடை வருகிறன் என்று இளவரசன் மனதில் மிக்க வருத்தமுண்டாயிற்று. அதனல் அவன், "ஆ! கொலையாளியாகிய தானப்பனு?" என்றுன்.

சகோதரிக்கு இவன் தானப்பனேடு சம்பந்தமுடைய வனு யிருப்பது கொஞ்சமும் தெரியாதாகையால், இத்தகைய இழிவான மனிதனிடம் நமது மைந்தன் இருக்கிறனே யென்று இவன் வியப்படைகிறன் என்று எண்ணிக்கொண் டாள்.

இள:—"இப்போது இந்த சர்ப்பத்தில் என்னசெய்யக் கருதி யிருக்கிறுய்? நான் இதில் என்னவிதமாய் உதவி செய்யக் கூடுமென்றும் கருதுகிறுய்?" என்ருன்.

சகோ:—,,சற்று பொறுமையாய்க் கேள். நான் உன்னே யிங்கு ஏன் வரவழைத்தேன் என்பதைக் கூறுகிறேன். என் புத்திரன் அத்தகைய இழிவான மனிதனிட மிருப்பது டாக்டருக்கு இரண்டு மாதங்களாகத் தெரியும். ஆனல் செல்வநாதன் கண்டுபிடித்து வந்து கூறிய அச்சங்கதியை பங்கஜம்மாள் சீமாட்டியிடம் கூற டாக்டருக்கு இது வரையிலும் மனம் வரவில்லே. அச்சீமாட்டி துப்பறியும் செல்வநாதனேக் கொண்டு அவ்வாலிபன் விஷயங்களேக் கண்டுபிடிக்கும்படி தான் ஏற்பாடு செய்யப்போவதாய்க் கூறியதன்மேல்தான் டாக்டர், "நான் முன்னமே அதே செல்வநாதனே யிவ்விஷயத்தைக் கண்டுபிடிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். அவன் முன்னமே அவ்வாலிபன் உயிரோடிருக்கும் விஷயத்தையும், அவனேப்பற்றிய மற்ற விஷயங்களேயும், இப்போதவன் இருக்கும் இடத்தையும் கண்டு பிடித்திருக்கிறுன் என்று நடந்த சங்கதிகளேயெல்லாம் கூறினர். இதில் இன்னெரு விஷயம்; அதாவது செல்வநாதன் தற்செயலாகவே அவ்வாலிபனேநேரில்கண்டு அவன் சங்கதிகளே ஒருவாறு அறிந்துகொண்டு, அவன் இயற்கைக் குணத்தையும் கொஞ்சம் அறிந்துகொண்டு, தந்திரமாய் அவனேத் தன் மனேக்கழைத்துச் சென்று அவனே நல்வழிக்குத் திருப்ப தன்னுற் கூடிய முயற்சிகளேயெல்லாம் செய்தான். முதலில் வாலிபன் செல்வநாதன் பிரியப்படி வந்தாலும் சீக்கிரத்தில் பழைய குணங்களால் தூண்டப்பட்டு,

பழைய நண்பரோடு போய்க் கூடிக்கொண்டு பழைய வழிகளிலேயே பிரவேசிக்கலானன். இச்சங்கதிகளை யெல்லாம் அச்சீமாட்டி மெதுவாய் டாக்டரிடமிருந்து கிரகித்துக்கொண்டு இன்றுதான் எனக்குக் கூறினள். இவற்றைக் கேட்ட என் மனம் அடையும் வேதனை இத்தகையதென என்னல் கூறமுடியாது" என்று கண்ணீர் விட்டுக்கொண்டே கூறினள்.

இளவரசன் அவள் மொழிகளைக் கேட்டு "நீ கூறுகிற படி அவன் நல்வழிக்குக் கொண்டுவரக் கூடாதவனு யிருந்தால் பேசாமல் அவன் இருக்கிற விடத்திலேயே அவனை விட்டுவிடுவது நலமென்று கருதுகிறேன்" என்ருன்.

சகோ:—"அய்யோ கடவுளே! என் கூடப்பிறந்த சகோதரனு யிருந்து நீயா இத்தகைய புத்தி கூறுகிருய்?" என்று மிக்க வெறுப்போடும் மனவருத்தத்தோடும் கூறினள்.

இள:—"நீ எப்படி மனம் வந்து இத்தனை வருடங்களாகப் பெற்ற மைந்தனைச் சற்றும் கவனியாமல் இப்படி விட்டுவிட்டிருந்தாய்? கொஞ்சநஞ்ச காலமல்லவே. பத்தொன்பது வருடங்களாக" என்று வெறுப்போடு கூறினன்.

இம்மொழிகளைக் கேட்ட அம்மாது மிக்க மனவருத்த மடைந்து அதிகமாய்க் கண்ணீர் விட்டு, "அய்யோ தெய்வமே! இது எனக்குச் சரியான தண்டனையே. ஆம் உண்மையாகவே முழுதும் தக்க சிட்சையே. எனக்குத் தகுதியானதே. என்னைப் போன்ற இரக்கமற்ற சண்டாளத் தாய் உலகில் வேறு கிடைப்பதரிது. இதுமட்டு மல்ல; இத்தண்டனை யெனக்குப் போதாததே. இன்னும் கொடிய

தண்டனைக்கு நான் பாத்திரமானவளே. பூமியே வெடித்து என்னை விழுங்கிவிட்டாலும் என் அசுபாவமான குற்றத்திற் குத் தகுதியானதே. ஆயினும்...ஆயினும் கடவுளே! என் சொந்த சகோதரனிடமே இத்தகைய வார்த்தைகளைக் கேட்கவேண்டுமாயின்......" என்றாள்.

இளவரசன் அவள் மொழிகளைக் கேட்டு சற்று மன மிரங்கி, "நான் கொஞ்சம் ஆத்திரப்பட்டுப் பேசிவிட்டேன். அதை மனதில் வைக்காதே. இப்போது இதைப்பற்றி என்ன ஏற்பாடு செய்யவேண்டு மென்கிறாய்? இதில் நான் எவ்விதமாய் உதவி செய்யவேண்டு மென்கிறாய்?" என் றான்.

சகோ:—என்னுடைய இரகசியங்கள் யாவும் உனக்குத் தெரி யும். ஆகையால் என் புத்திரனுடைய நிலைமையைப் பற்றி பூரணமாய் உன்னிடம் கூறிவிடுகிறேன். நீ யிள வாசனா யிருப்பதால் அவனை அந்த அகோரமான நிலை மையிலிருந்து மீட்டுவிட உன்னால்தான் முடியும். அய்யோ அவனிருக்கும் நிலைமையோ மிக்க இழிவான தும் அகௌரவமானதுமா யிருக்கிறது.

இளவரசன் யவளை யுற்றுநோக்கி "அவனை மீட்டுக் கொண்டு வந்து உன் இரகசியம் அவனுக்கு தெரியச்செய்து அவனை யுன்னோடு கூடவே வைத்துக்கொள்ள யோசித்திருக் கிறாயோ?" என்றான்.

சகோ:—"அப்படிப்பட்ட யோசனை யெனக்கொன்று மில்லை. அவனை யந்த அயோக்கிய சகவாசத்தி லிருந்து மீட்டு யோக்கியமான வழியில் பிரவேசிக்கச் செய்து நல்வழியில் ஜீவனம் செய்து ஒரு பெரிய மனி

தன் என்று பெயரெடுக்கும்படிச் செய்துவிட வேண்டு மென்பதே என் கருத்து" என்ருள்.

இள:—நீ சொல்வதென்ன? நான் போய் உடனே யவனை யழைத்து வந்து என்னிடம் ஒரு பணியாளாய் வைத்துக்கொள்ள வேண்டுமென்கிருயோ? ஏன் அவன் மறு நாள் இரவே நான் நித்திரை செய்யப்பார்த்து என் படுக்கை யறையில் நுழைந்து என் கழுத்தை யறுத்து விடவா?

இக்கடுமொழிகளைக் கேட்ட மாது "ஆ! குரூர நெஞ்சனே, நீயா இப்படிக் கூறுவது? அதிலும் என் மனை. நம் மிருவர் தேகத்திலும் ஒரே இரத்தம் ஓடிக்கொண்டிருப் பதைக் கூட நீ கவனிக்காமலல்லவோ பேசுகிருய்?" என் ருள்.

இள:—"நீ இத்தனை வருடங்களாய் அவனைக் கவனிக்காமல் அசட்டையாய் விட்டுவிட்டதனுலேயே அவன் இத் தகைய இழிவான சகவாசமும் நடக்கைகளும் சுபாவ மும் உடையவனுன். அவன் மறுபடி நல்வழிக்குத் திருப்பமுடியாதவனு யிருக்கிறவரையில் அவனை யவன் இப்போதிருக்கும் நிலைமையிலேயே விட்டுவிடுவது தான் நல்லது. அதுதான் என் முடிவு" என்று கோபத் தோடு மொழிந்தான்.

தன் சகோதரனுடைய கடுமொழிகளைக் கேட்ட சகோ தரி மிக்க மனத்துயரும் கோபமு மடைந்து, "சகோ தரனே! நான் என்னதான் கொடிய நெஞ்சமுடைய வளாய் பெற்ற பிள்ளையிடமே யிதுவரையில் இரக்கமின்றி நடந்துகொண் டிருந்தாலும், இனி யொருபோதும் என் புத்திரனை யிப்போதவன் இருக்கும் நிலைமையில்விட் டிருக்கமாட்டேன். இதனுல் என்ன நேர்ந்தாலும் சரி.

எனக்கு என்ன ஆபத்து வந்தாலும் சரி. ஒரு சமயம் என் மானமே போனாலும் சரி. நீ என்னை யொரு கோழை யென்று நினைக்கவேண்டாம். நானே மாறுவேட மணிந்து கொண்டு நேராய் அவன் இருக்கும் மிக்க இழிவும் அகௌரவமுமான வாசஸ்தலத்திற்குச் சென்று எப்படியாவது அவனை அத்தகைய சகவாசத்திலிருந்து மீட்டுவிடுவேன். என் தைரியமும் துணிகரமுமான செய்கைகள் யாவும் உனக்குத் தெரிந்தே யிருக்கிறது. நான் அதிகம் கூறவேண்டுவதில்லை'' என்று கண்களில் கோபத்தணல் வீசக் கூறினாள்.

இளவரசன் மிக்க மனக்கலக்க மடைந்து "தங்காய்! உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? உன்னை எத்தனையோ பேர் பார்த்திருக்கிறார்கள். நீ என்னதான் சாமார்த்தியமாய் மாறுவேட மணிந்து சென்றாலும் கள்ளரும் பரம துஷ்டருமாகிய அக்கூட்டத்தாரில் உன்னை முன்பின் கண்டிருப்பவர்கள் யாராவ தொருவரிருந்தால், அவர்கள் உன்னைக் கட்டாயம் அறிந்துகொள்வார்கள். பிறகு உனக்கு அவ்வாலிபனிட மிருக்கும் அன்பினால் மெதுவாய் உன் இரகசியத்தை யறிந்துகொள்வார்கள். எப்படி யெனில் மாறுவேட மணிந்து தங்கள் உளவை யறியவரும் துப்பறிகிற போலீஸார்களின் உண்மையை யறிந்துகொள்வதில் அவர்கள் மிக்க சாமார்த்தியமும் அனுபவமும் உடையவர்கள். தானப்பனிடத்தில் மட்டும் உன் இரகசியம் சிக்கிக்கொண்டதோ-அவ்வளவு வேண்டாம், அதைப்பற்றி யவனுக்குச் சந்தேக முண்டானாலும் போதும் - பிறகு நீ படும்பாடு ஆண்டவனே யறியவேண்டும்'' என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட சகோதரிக்கு ஒரு பக்கம் இளவரசன் கூறுவது உண்மையேயென்று பட்டது. ஆயினும் இந்த பீதிக்கு இடங்கொடுத்து அவன் கூறுகிறபடி

186548

தன் புத்திரனை யந்த நிலைமையில் விட்டுவிட அவள் மனம் சற்றும் ஒப்பவில்லை.

ஆகையால் அவள் தன் மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு தன் சகோதரனை நோக்கிக் கோபத்தோடும், அடக்கமுடியாத துயரத்தோடும், கீழ்க்கண்டபடி கூறினாள்:—

சகோதரனே! நமது குடும்பத்தில் ஏறக்குறைய யாவருமே குற்றம் சாட்டக்கூடியவர்களாயிருக்கிறார்கள். நம்வரையில் என் நடக்கைகள் யாவும் உனக்குத் தெரிந்தேயிருக்கிறது. அதுபோலவே உன் நடக்கைகள் யாவும் எனக்குத் தெரிந்தவைகளே. நான் தவறாய் நடந்துகொண்டவள்தான். அதுமட்டுமல்ல; நான் பெற்ற குழந்தையிடம் மனித சுபாவத்திற்கு மாறாக இரக்கமின்றி என் கௌரவத்தையே பெரிதாகக் கருதி நடந்துகொண்டேன். அதனால் என் புத்திரனை அழுகிய சாக்கடைச் சேற்றிற்குச் சமானமான மிக்க இழிந்த சகவாசத்தில் விழும்படி தள்ளிவிட்டேன். அதனால் பெரும் பாதகத்துக் காளாய்விட்டேன். இக்குற்றம் இப்போது என் மனதைப் பொறுக்க முடியாதபடி வாதிக்கிறது. இனி நாம் சும்மா யிருக்கமுடியாது. என் கண்மணியை அந்த ஆபாசமானவிடத்திலிருந்து அப்புறப் படுத்திவிட்ட பிறகே என் மனம் ஒரு நிலையில் நிற்கும். இதற்காக வேண்டிய முயற்சியை நான் செய்யாமல் சும்மா யிருக்கமாட்டேன். இதனால் என் பிராணனுக்கே ஆபத்து நேர்வதாயினும் நேரட்டும். என் பயங்கர இரகசியமே வெளிவந்தாலும் வரட்டும். இதுமட்டுமல்ல, நமது குடும்பத்திலுள்ள எல்லா இரகசியங்களும் பகிரங்கத்திற்கு வந்துவிடுவதாயினும் வந்துவிடட்டும். நான் எதற்கும் அஞ்சமாட்டேன். நீயே யோசித்துப் பார். இத்தகைய

துன்பத்தை யனுபவித்துக்கொண் டிருக்கையில் என் மனம் எந்த காரியத்தைச் செய்யத்தான் துணிந்துவிடாது" என்று கண்ணீர் பெருக்கிக் கதறி யழுதாள்.

இள:—"பொறு பொறு அழவேண்டாம். அவனைப்பற்றி நான் ஏதாவது ஏற்பாடு செய்கிறேன். சமயம் நேர்ந்தால் பேசாமல் அவனைப் பிடித்து தூரதேசத்திற்குக் கப்பலேற்றி யனுப்பிவிடுவேன். அங்குள்ள ஒரு பாங்கிக்குப் பணம் அனுப்பி அங்கு அவனுக்குத் தகுதியான ஒரு வேலையில் அவனை யமர்த்தி வைக்கும்படி செய்துவிடுவேன்" என்றான்.

அம்மாது சற்று மனத்தேறுத லடைந்து, "ஆ! அது தான் எனக்கு வேண்டியது. ஏதாவது ஒரு ஏற்பாடு செய்துவிட்டால் போதுமானது. அதுவே நீ எனக்குச் செய்யவேண்டிய உதவி" என்றாள்.

இள:—"சரி. நான் இன்னது செய்யவேண்டு மென்பதைக் கூறு. அதன் பிறகு நான் சொல்லுகிறேன்" என்றான்.

இராஜகுமாரி:—"நீ அவனுக்குத் தகுதியான எந்த ஏற்பாட்டையாவது செய்து-ஆனால் முன்னடி ஒரு வாக்குத்தத்தம் மட்டும் செய்யவேண்டும் - அதாவது நீ முன்னடி எனக்குத் தெரிவித்து என் சம்மதத்தைப் பெறுமல் இந்த விஷயத்தில் ஒரு ஏற்பாடும் செய்வதில்லையென்று வாக்களிக்க வேண்டும்; இரண்டாவது அவனை இந்நாட்டிலிருந்து வெளிப்படுத்து முன் நான் அவனை யொருதரம் பார்க்கவேண்டும். எந்தவிதமாகவாவது நீ யதற்குத் தக்க யேற்பாடு செய்யவேண்டும்" என்றாள்.

இளவரசன் சற்றுநேரம் சிந்தித்து "சரி! நான் இதன் படிக்கே உன் கோரிக்கைகளை யெல்லாம் செய்து முடித்தால் நீ பதிலுக்கு எனக்கொரு உதவி செய்வாயா?" என்றான்.

சகோதரி சிந்தித்தாள். தன் தமையன் குணங்களெல்லாம் நன்ருய்த்தெரியும். அவன் பல துஷ்டச்செய்கைகளைச் செய்திருப்பவன். அவன் இரகசியங்கள் பலவுள. மேலும் அவன் சுயநலம் கருதாமல் ஒன்றைச்செய்வதிலும் சுயநலம் கருதிச் செய்தாலே அக்காரியத்தைச் சரியாய் நிறைவேற்றுவான் என்று அவள் நன்கறிவாள். ஆகையால் "சரி! உனக்கு என்னால் ஆகவேண்டிய காரியம் இன்னதென்று கூறினால் நான் செய்கிறேன். அதை விவரமாய்க் கூறு" என்ருள்.

இள:—சகோதரியே இப்போது இத்தனை வருடங்கள் கழித்து உன் புத்திரனைக் காணவேண்டுமென்று உன் மனதில் ஆவல் உண்டாய்விட் டிருக்கிறதல்லவா? அதை யடக்க முடியவில்லை யென்று நீயே கூறினை. அதைப்போலவே என் மனதிலும் என்னை யறியாமலே ஒரு உணர்ச்சி யுண்டா யிருக்கிறது. அது என் மனதை வாதித்துக்கொண்டே யிருக்கிறது. இதுகாறும் அதைத் திருப்தி செய்துகொள்ள எனக்கு ஒரு மார்க்கமும் புலப்படவில்லை. இப்போது நீ உன் புத்திரன் விஷயத்தைப்பற்றி என்னிடம் கூறியபோது என் மனதில் அதற்கொரு வழிதோன்றியது.

என் இரகசியங்களில் பெரும்பாலானவை நீ யறிந்தவையே. இப்போது நான் கூறப்போகும் விஷயமும் உனக்குத் தெரிந்ததே. அதாவது பங்கஜம்மாளுடைய தமக்கையாகிய பத்மாவதி என்பவள் மேல்தான் நான் காதல்

கொண்டிருந்ததும் அதனுல் ஒரு பெண் குழந்தை பிறந்ததும் உனக்குத் தெரியும். பத்மாவதி என்னுல்நேரிட்ட அந்த மனே வியாகூலத்தாலேயே வியாதியுற்று மடிந்தாள். அது ஒரு பெரும்பாதகம் என் தலேமே லேறியிருக்கிறது. இப்போது அப்பெண்ணைக் கண்டு பேசவேண்டும் என்ற ஒரு அடங்காத பெரிய ஆவல் என்மனதில் உண்டாயிருக்கிறது.. அப்பெண்ணை நான் ஒருமுறைகண்டு வாயால் என்மனதாரப் பேசினுல் போதும். நான் அவள் தந்தை என்று அவளுக்கு அறிவிக்க நினைக்கிறேனென்று கருதாதே. அச்சங்கதியவள் ஒருபோதும் அறியவேகூடாது. நான் அரசன் தன் குடிகளிடம் எவ்விதமாய் அன்பு காட்டுவாஞே அவ்வித அன்பு காட்டுவேனே யன்றி வேறில்லே. புத்திரி வாஞ்சையெவ்வள விருப்பினும் மிக்க கஷ்டத்தோடேனும் மனதில் அடக்கிக்கொண் டிருப்பேனென்பது நிச்சயம்.

ஆனுல் நான் அவள் வாசஸ்தலத்திற்குச் சென்று அவளேக்காண அனுகூலமில்லே. ஏனெனில் பங்கஜம்மாள் சீமாட்டிக்கும் அவள் கணவனுக்கும் என்மேல் பிரியமில்லேயென்று நானறிவேன். அதற்ருன் நான் உன்னே வேண்டிக்கொள்வதாவது, நீ யவர்களிடம் நேசப்பான்மை கொண்டிருக்கிருய். ஆகையால் நீ யெந்த தந்திரமாவது செய்து, அப்பெண்ணே மாளிகைக் கழைத்துவந்து அவளோடு நான் பேசும்படி செய்யவேண்டும். இது ஒருதாமே செய்யவேண்டும். இதே யென் கோரிக்கை'' என்ருன்.

சகோ:—"சரி நான் அப்படியே நாளேக்குச் சென்று அதைப் பற்றி யேற்பாடு செய்கிறேன்'' என்ருள்.

இளவரசன் "நானும் ஆலசியமின்றி நீ கூறியபடி உன் புத்திரன் விஷயத்தில் தக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்ருன்.

அதன் பிறகு இளவரசன் விடைபெற்றுக்கொண்டு தன் இடத்திற்குச் செல்ல இராஜகுமாரி தன் அறையில் உட்கார்ந்து சிந்தனையிலிருந்தாள்.

---

87 - வது அத்தியாயம்

மறுநாள் பிற்பகல் இரண்டு மணிக்கும் மூன்றுமணிக்கு மிடையில் கொலையாளியாகிய தானப்பனுடைய வீட்டில் என்ன நடக்கிறதென்று கவனிக்கவேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமா யிருக்கிறது.

தானப்பன் தன் தொழில் (சௌளம்) செய்யும் கூடத்தில் உட்கார்ந்து அவ்வீதியில் கோடியில் அதேத் தொழில் செய்யும் இன்னொருவனோடு சம்பாஷித்துக்கொண் டிருக்கிறான். ஜனகன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு ஒரு பிரக்யாதி பெற்ற கள்ளன் கதையை வாசித்துக்கொண் டிருக்கிறான். அவன் சகோதரியாகிய காமாட்சி சமையல் அறையில் ஏதோ வேலைசெய்துகொண் டிருக்கிறாள். இராசப்பன் இரண்டொரு நாழிகை வேடிக்கையாய்க் காலங் கழிக்க வெண்ணி எங்கோ வெளியில் சென்றிருக்கிறான். தானப்பன் தன் போன்ற தொழிலாளியோடு பேசிக்கொண் டிருந்தானென்று கூறினோமல்லவா? திடீலென்று உண்டான ஒரு வியப்பால் அவன் சம்பாஷணை தட்டென்று நின்றுவிட்டது. எவ்வாறெனில் அச்சமயம் சூரியநாயகம் பிரபு அவ்வீதியின் வழியாய் வருவதைக் கண்டான்.

இரண்டு மூன்று விஷயங்களால் தானப்பனுக்கு முதலில் திகிலுண்டாயிற்று. அவரைக் கொள்ளையடித்துப் பிடித்து வந்து சிறைப்படுத்தியது ஒன்று. அவர் வீட்டிற்

குத் தீயிட்டதொன்று. நீலாளைக் கொலைசெய்ததொன்று. இவைகளில் எதற்காவது தன்னைப் பிடித்துக்கொடுக்க வருகிறாரோ வென்று அவன் மனங் கலங்கினுன். ஆனல் அவன் மனோதைரியமும் துணிகரமும் சமயோசித புத்தியும் உடையவனுதலால் கீழ்க்காணுமாறு சிந்தித்து தைரிய மடைந்தான்.

“கொள்ளை விஷயத்திற்கு நம்மை தண்டிக்கக் கருதினல் பனிரண்டு நாட்களாய்ச் சும்மா யிருந்திருக்கமாட்டார். தீவைத்த சங்கதி நாமும் நமது நண்பரும் செய்ததென்று இவர் எப்படி ருசுப்படுத்தமுடியும். அதற்குச் சாட்சியாவது ருசுவாவதேது, ஒன்றுமே யில்லை. நீலாள் விஷயம் அந்த இரவில் நடந்தது இவருக்கெப்படி தெரியும். நாம் அவளைச் சந்தித்த சங்கதியே யாருக்கும் தெரியாது. நமக்கும் நமது நண்பருக்கு மட்டுமே யது தெரியும்; ஆகையால் நாம் இதற்காகச் சற்றும் பயப்பட வேண்டியதில்லை” என்று தனக்குள் சிந்தித்துக் கலக்க மொழிந்தான்.

அதற்குள் தானப்பனோடு பேசிக்கொண்டிருந்த மனிதன் விடைபெற்றுச் செல்ல சூரியநாயகம் பிரபு தானப்பன் வீட்டெதிரில் வந்து நின்றதும் அவனை நோக்கி “ஓ தானப்பா! நான் உன்னைக்கண்டு பேசவே இங்கு வந்தேன்” என்றார்.

தானப்பன் “ஆகா! அப்படியா? வாருங்கள் பிரபுவே. உள்ளே வாருங்கள்” என்று அவரை கடைக்குள் அழைத்துச் சென்று ஆசனமளித்து உபசரித்தான். பிரபு உட்கார்ந்ததே தானப்பன் அவரை நோக்கி,

“பிரபுவே! “தாங்கள் இவ்வளவு தயவு வைத்து எளியேன் குடிசைக்கு வந்த வரையில் அன்றிரவு நடந்த சங்கதி

களுக்காக என்னை மன்னித்து விட்டீர்களென்று கருது கிறேன்'' என்றான்.

பிரபு:—''நான் அந்த இக்கட்டிலிருந்து பூரணமாய் தப்பித் துக்கொண்டு வந்துவிட்ட வரையில் அதைப்பற்றி என் மனதில் ஒரு வஞ்சமுமில்லை. அப்படி நான் கெடுதி செய்யக் கருதி யிருந்தால் முன்னமே யுன்னையும் உன் கூட்டாளிகளையும் போலீஸாரிடம் பிடித்துக் கொடுத்து விட்டிருப்பேன். அதைப்பற்றி யுனக்கு ஒரு கலவர மும் வேண்டாம். நான் உன்னிடம் வேறு விஷயத் தைப்பற்றி பேசவந்தேன்'' என்றார்.

தானப்பன் ''நான் ஆயத்தமா யிருக்கிறேன். பிரபுவே கூறுங்கள்'' என்று எதிரிலிருந்த ஒரு அலமாரியின்மேல் சாய்ந்துகொண்டான். பிரபு ''இங்கு வேறு யாருமில்லாத வரையில் எந்த இரகசியத்தையும் அச்சமின்றி கூறலாமல் லவா? யாரும் ஒத்துக் கேட்பவர்களில்லையே?'' என்றார். தானப்பன் ''பிரபுவே! அப்படிப்பட்ட பயம் சற்றுமே யில்லை. நாம் தாராளமாய்ச் சம்பாஷிக்கலாம்'' என்றான்.

பிரபு அவன் முகத்தை யுற்று நோக்கி, ''உனக்குச் சுக சிங்கம் பிரபுவினுடைய மாளிகையின் உட்பக்க முழுமையும் நன்றாய்த் தெரியும் என்று கருதுகிறேன்'' என்றார். தானப் பன் இதைக் கேட்டு திடுக்கிட்டு மிக்க வியப்படைந்து ''ஓகோ! தங்களுக்கு இந்த இரகசியம் எப்படித் தெரிந்துவிட் டது?'' என்றான்.

பிரபு:—''எப்படியோ தெரிந்தது. எனக்கு யாவும் தெரியும் என்கிற வரையில் நீ யறிந்துகொண்டால் போதும். உனக்கு அம்மாளிகையின் உட்புறம் முழுமையும் தெரியுமென்பதோடு அங்குள்ள இரகசிய அறைகளும்

அவற்றி லொன்றிலுள்ள சூத்திர நாற்காலிகளுங்கூடத் தெரியும்" என்றார்.

தானப்பன் பின்னும் மிக்க வியப்படைந்து, "அடடா! உங்களுக்கு எல்லா சங்கதிகளும் தெரிந்திருக்கிறது. பேஷ்! இனி தாங்கள் கூறவேண்டிய சங்கதிக்கும் இதற்கும் என்ன சம்பந்த மிருக்கிறதென்பது எனக்கு விளங்கவில்லை" என்றான்.

பிரபு:—"நீ இன்னொரு நாளைக்கு இரவில் ஒருவர்க்கும் தெரியாமல் அம்மாளிகைக்குள் புகுந்து அதே இரகசிய அறைகளுக்குச் செல்லமுடியுமா? என்பதைக் கூறினால் பிறகு மற்ற சங்கதிகளை நான் கூறுகிறேன்" என்றார்.

தானப்பன் மிக்க பெருமையோடு, "பிரபுவே! என்னால் நுழையமுடியாத ஒரு வீடு இந்த இரத்னபுரி நகரிலேயே எதுவும் கிடையாது. நான் எந்தவிதத்திலாவது உடைத்துத் திறக்கமுடியாத பூட்டும் கிடையாது" என்றான்.

பிரபு:—"நீ நான் கூறுகிற இரவு அம்மாளிகையி லிருக்கும் இரகசிய அறைகளில் முதல் அறையில் நுழைந்து அங்குள்ள திரை மறைவில் ஒளிந்திருந்து நான் கூறுகிறபடி ஒருவிதமான சமிக்கை செய்யும்போது வெளியில் வரவேண்டும். நீ கேட்கிற பரிசு நான் கொடுக்க ஆயத்தமா யிருக்கிறேன். முன்னே பாதியும், அந்த அறையில் நாம் சந்திக்கும்போது மற்ற பாதியுமாகக் கொடுப்பேன்" என்றார்.

தானப்:—"பிரபுவே! என் சந்தேகத்திற்காக என்மேல் ஏதோ வஞ்சங்கொண்டுதான் என்னை யந்த விடத்

திற்கு வாவழைக்கிறீர்களென்று நான் எப்படி சந்தேகங் கொள்ளாதிருப்பது?'' என்றான்.

பிரபு:—"நீ பேசுவது வீணான சங்கதி. நான் உனக்குக் கெடுதிசெய்ய எண்ணியிருந்தால் இத்தனை நாள் பொறுத்துக் கொண்டிருந்து இப்போது உன்னை அப்பிரபுவின் மாளிகைக்கு வரும்படி தூண்டவேண்டியதும், முன்னாடி உனக்குப் பணம் கொடுக்கவேண்டியதும் சற்றும் அவசியமல்ல. ஒரு விநாடியில் உன்னையும் உன் கூட்டாளிகளையும் அப்போதே பிடித்துக் கொடுத்துவிட்டிருப்பேன். அந்த நீலாள் என்ற மாது எனக்குச் செய்த உதவிக்காக, அவள் கோரிக்கைப்படி யுங்களுக்குக் கெடுதி செய்யலாகாதென்று விட்டுவிட்டேன்'' என்றார்.

தானப்பன் மிக்க சாமார்த்தியத்தோடு அவரை நோக்கி, "பிரபுவே! அவள் இரண்டொரு குற்றங்களைச் செய்திருந்தாலும் மொத்தத்தில் மிக்க நல்லவளே. தாங்கள் கொடுத்த அந்த நூறு சவான்களை யெங்களுக்குக் கொண்டுவந்தளித்தபோதே அவள் செய்த அற்ப குற்றங்களை யடியோடு மன்னித்து விட்டோம்'' என்றான்.

பிரபு:—"சரி, இருக்கட்டும்; இப்போது நான் உன்னை அப்பிரபுவின் மாளிகைக்கு வரும்படி கூறுகிற விஷயமென்னவெனில், அப்பிரபு அந்த இரகசிய அறைகளில் ஒரு மாதைச் சந்திக்க ஏற்பாடு செய்திருக்கிறான். ஏதோ சில சங்கதிகளால் அவள் தன்னிடம் சிக்கிக் கொண்டிருப்பதாய்க் கருதி அவளை யடியோடு தன் அடிமைபோல் செய்துகொள்ளப் பார்க்கிறான். அம் மாதுக்கு நான் உதவிசெய்யத் தீர்மானித்திருக்கிறேன்.

அப்பிரபுவின் சகோதரன் புத்திரியாகிய தெய்வயானையின் அயோக்கியச் செயல்களெல்லாம் எனக்குத் தெரியும். நான் வாயால் மட்டும் அவற்றைக் கூறிப் பயப்படுத்துவதை விட ஒரு சாக்ஷியைக்கொண்டும் நிரூபிக்க முடியுமென்று அப்பிரபுவுக்குத் தெரிந்தால் அவர் உடனே அகங்குன்றி நான் காப்பாற்ற வந்த மாதின் சோலிக்கு இனி வருவதில்லையென்று கூறிவிடுவார். நீ அங்குள்ள திரையின்பின் மறைந்திருந்து நான் "இராஜாங்கக் கொலைகாரனாகிய தானப்பனைக்கொண்டே யிதை நிரூபிப்பேன்" என்று எப்போது கூறுகிறேனோ, அதையே நீ சமிக்கையாய்க் கொண்டு உடனே மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு எங்கள் முன் வந்து நிற்கவேண்டும். இதற்காக உனக்கு வேண்டிய பரிசைக் கேள்" என்றார்.

தானப்பன் சற்றுநேரம் சிந்தித்தான். ஏனெனில் இளவாசன் தெய்வயானை மூலமாய்த் தனக்குப் பணம் அனுப்புவதாய்க் கூறியிருக்கிறான். இப்போது நாம் அவளுக்கு விரோதமாய் நடந்தால் அதனால் நமக்கு ஏதேனும் பிரதிகூலம் நேரிடுமோவென்று கருதினான். சற்று சிந்தித்து, "இப்போது நடக்கும் நடக்கையில் அவளுக்கு நம்மேல் அதிகபீதியும் வெறுப்புமே உண்டாய்விடும். நாமோ "கேட்டபணத்தைக் கொடுத்தால் நான் உடனே நமது நாட்டைவிட்டு அன்னியதேசம் போவதாய் இளவாசனிடம் கூறியிருக்கிறோம். ஆகையால் இப்படிப்பட்டவன் ஒழிந்து போவதே நலமென்று கருதி நமக்கு அப்பணத்தைக் கொண்டுவந்து கொடுத்துவிடுவாள். அப்படிக்கின்றி நம்மேல் அதிக கோபம்கொண்டால் நான்போய் அவனிடம் இப்பணத்தைக் கொடுக்கமாட்டேன் என்று மறுத்துவிடு

வாள். அப்படி நேர்ந்தால் இளவரசன் வேறு யார்மூலமாக வாவது அப்பணத்தைக் கொடுத்தனுப்புவானேயன்றி சும் மாயிருந்துவிடமாட்டான். ஏனெனில் அப்படி யிருந்துவிட் டால் நாம் மறுபடி அவனைச் சந்திக்கவருவோமென்று அவன் நன்கறிவான். ஆகையால் இதனால் நமக்குப் பிரதி கூலம் ஒன்றும் நேராது. வீணாய் இப்பிரபு தாராளமாயளிக் கக்கூடிய பணத்தை நாம் ஏன் இழந்துவிடவேண்டும்'' என்று தனக்குள் தீர்மானம் செய்துகொண்டு, பிரபுவை நோக்கி "பிரபுவே! தாங்கள் இம்மாதிரி கூறுகிறவரையில் எனக்கு ஒரு சந்தேகமுமில்லை. எதற்கும் நான் தக்க தற் காப்போடுதான் எங்கும் செல்வேன். ஆகையால் வீணாய் இருநூறு பவுனுவது கிடைப்பதை ஏன் இழந்துவிடவேண் டும்'' என்றான்.

பிரபு:—சரி. நீ கூறுகிறவற்றால் இதற்கு இருநூறு சவரன் கள் கேட்கிறாயென்றுகருதுகிறேன்......

தானப்:—''பிரபுவே, அதற்குக் குறைவாய் முடியாது. நான் எவ்வளவோ தந்திரசாமர்த்தியத்தோடு அம்மாளிகையி லுள்ள வேலைக்காரர் முதலிய ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் உள்நுழைந்து அந்த இரகசிய அறைக ளுக்குச் செல்லவேண்டும். நான் மறைந்து பதுங்கிச் செல்லும்போது, யாராவது என்னைப் பார்த்துவிட் டாலோ,நமது நாட்டுச் சட்டம் இடந்தருகிறபடி கள்ள னென்று என்னைச் சுட்டுவிடலாம். ஆதலின் நான் பிராணனுக்குத் துணிந்து உமது கோரிக்கையை நிறை வேற்றவேண்டும்'' என்றான்.

பிரபு:—''சரி; இதோ நீ கேட்டதில் பாதிதொகை. மற்ற பாதியை அம்மாளிகையில் சந்திக்கும்போது தருகி

றேன். நீ இன்று இரவு பதினோருமணிக்குச் சரியாய் அந்த இரகசிய அறையிலிருக்கவேண்டும்'' என்றார்.

தானப்பன் மிக்க ஆவலோடு பிரபு கொடுத்த பணத்தை யெடுத்துக்கொண்டு, அவர் கூறியபடியே செய்வதாய் வாக்களித்தபின் அவர் அங்கிருந்து வெளிப்பட்டார்.

அன்றிரவு சுமார் ஒன்பதரை மணி யிருக்கும். அப்போது தானப்பன் இரண்டு கெட்டித்த கைத்துப்பாக்கிகளையும் ஒரு ஈட்டியையும் பூட்டுகளைத் திறக்கும் கள்ளச் சாவி முதலிய கருவிகளையும் எடுத்து தன் உட் சட்டையிலுள்ள கள்ளப் பையில் மறைத்து வைத்துக்கொண்டு, மேலேயொரு பெரிய அங்கியை யணிந்துகொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டு சுகசிங்கம் பிரபுவின் மாளிகை யிருக்கும் வீதியை நோக்கிச் சென்றான். அவன் அவ்வீதியிற் பிரவேசிக்கும்போது மணி பத்தரையாயிற்று.

தானப்பன் அப்பிரபுவின் மாளிகை யெதிரில் இரண்டு மூன்று முறை குறுக்கும் நெடுக்குமாய்த் திரிந்துகொண்டே மாளிகையை நன்றாய்க் கவனித்தான். அங்கு ஏறக்குறைய நிர்ச்சந்தடியாகவே யிருந்தது. ஜனங்களின் நடமாட்டம் இல்லை. அச்சமயம் ஒருவன் கடிதம் எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். அதைக் கண்ட தானப்பன் அவன் சென்ற ஐந்து நிமிடத்திற்குள், திறந்திருக்கும் வெளி மதில் சுவரின் வாயிற்படி வழியாய்ச் சென்று தைரியத்தோடு உள் வாயிற்கதவை மெதுவாய்த் தட்டினான். மாளிகையிலுள்ள பிரதம வேலைக்காரன் உடனே வந்து கதவைத் திறந்தான்.

அவ்வேலைக்காரன் தானப்பனை முன்பு இருமுறை கண்டிருக்கிறான். இவன் யாரென்பதும், இவன் எக்காரணத்

தாலோ பிரபுவோடும் அவருடைய சகோதரர் புதல்வி யோடும் சம்பந்தப்பட்டிருக்கிறுன் என்று அவன் அறிந் திருக்கிறுன். பிரபுவின் அயோக்கிய நடக்கைகளும், தெய்வ யானையின் நடக்கைகளும் அவன் நன்ருய் அறிந்தவன். ஆகையால் தானப்பன் அவனைக் கண்டதும் "எல்லாம் சரி தான், சங்கதி இரகசியமா யிருக்கட்டும்" என்று கூறுவது போல் சமிக்கை செய்துவிட்டு நேராய் உள்ளே நுழைந்த போது, வேலைக்காரன் "இன்றைக்கு இவனை யிரகசியமாய் இங்கு வரும்படி பிரபு ஏற்பாடு செய்திருக்கிறுராக்கும்' என்று கருதிக்கொண்டு பேசாமலிருந்துவிட்டான். இவ்வித தந்திரத்தால் உள்ளே நுழையவேண்டுமென்றே தானப்பன் தனக்குள் கருதி வந்தான்.

அவன் தன் வரவை யெதிர்பார்த்திருக்கும் ஒருவரைச் சந்திக்கப் போகிறவன்போல் சற்றும் கலவரமின்றி நிம்மதி யோடு படிகளின் மேலேறி இரகசிய அறைகளை நோக்கிச் சென்ருன். ரோஜா அறைக்குள் நுழைந்து அதன் வழி யாகவே இரகசிய அறைகளுக்குச் செல்லவேண்டும் என் பதை நேயர்கள் மறந்திருக்கமாட்டீர்களென்று நம்புகிறேம். தானப்பனுடைய நற்காலம் வழியில் அவன் யாரையும் சந் திக்கவில்லை. அப்படிச் சந்தித்தாலும் அவர்களுக்குக் கூறத் தந்திரமான கட்டுக்கதை யாயத்தமாய் வைத்திருந்தான். வீதியிலிருந்து பார்த்தபோதே மாளிகையின் அப்பாகத்தில் தீபங்களில்லையென் றுணர்ந்துகொண்டான். ஆகையால் எங்கும் இருள் சூழ்ந்திருந்தாலும் அக்கள்ளனுக்கு அம்மாளி கையின் உட்புற வழிகளனைத்தும் நன்ருய்த் தெரியும். ரோஜா அறையின் எதிரில் வந்ததும் தன்னிடமுள்ள கள் ளச் சாவிகளில் ஒன்ருல் அவ்வறையின் கதவைத் திறந்து உட்சென்று இரகசிய அறைகளை யடைந்தான்.

இப்போது நாம் தானப்பனை யந்த அறைக்குள்ளேயே விட்டுவிட்டு அதே மாளிகையில் வேறொரு அறையைக் கவனிப்போம். அது தெய்வயானையின் சயன அறை. மிக்க அழகுடையவளா யிருந்தும் அதற்கு நேர்மாறான நடக்கையையுடைய அம்மங்கை அப்போதுதான் அறைக்குள் சென்றாள். மணி பதினொன்றானபடியால் அவள் சயனித்துக்கொள்ளும் சமயம் வந்துவிட்டது.

ஆயினும் அவளுக்கு நித்திரை வரவில்லை. அவள் மனதில் வியாகூலமும் ஒருவித வெறுப்பும் உற்சாகமின்மையும் குடிகொண்டன. ஏனெனில் அவள் இயற்கையாய் எப்போதும், கேளிக்கையாயும் தன் பிரியப்படி உலக வின்பங்களை யனுபவித்துக்கொண்டு மிருப்பவள். ஆனால் இப்போதோ அவற்றையெல்லாம் அனுபவிக்கமுடியாது வீட்டிலேயேயே மங்கிக்கிடக்கவேண்டியதா யிருக்கிறது. ஏனெனில் புருடன் இறந்து விதவையான மாது விதவைகளணிய வேண்டிய கறுப்புடையணிந்து ஒருவருடம் வரையில் விருந்துகள் வேடிக்கை கேளிக்கைகள் இவை முதலியவற்றிற்குப் போகாமல் வீட்டிலேயே துக்கத்தை யனுபவித்துக்கொண்டிருக்கவேண்டும். பிறகு அவர்கள் இஷ்டப்படி முன்போல் எங்கும் செல்லலாம். பிரியமானல் வேறு கணவனை வரித்துக்கொள்ளவும் கூடும். அதுவே அவர்கள் தேசாசார மதாசாரம். தெய்வயானை கூட்டங்களில்போய் கலப்பதாயின் சுலபத்தில் மறுபடி மணம்செய்து கொள்ளக்கூடும்.

முதலாவது தன் பிரியப்படி படாடோபமான ஆடையாபரணங்களை யணிந்துகொள்வதற் கின்றி கைம்பெண் உடையணிந்திருப்பதே அவளுக்குப் பெரிய வெறுப்பு. உண்மையில் அவளுடைய கணவன் மரணத்தைப்பற்றி அவளுக்குச் சற்றும் துயரமேயில்லையென்பது நாமறிந்த விஷயமே.

[stamp]

ஆயினும் உலகோர்க்கஞ்சி ஒருவருடம்வரையில் அந்தத் துக்கவுடையையே யணிந்துகொண்டு வீட்டிலேயே யிருக்க வேண்டியதா யிருக்கிறது. இந்த வெறுப்போடு தான் செய்த துஷ்டச் செய்கைகளும் புருடனுக்குச் செய்த படு மோசமாகிய நயவஞ்சகக் கொலைபாதகமும் இவை யாவும் ஒரு பக்கம் அவள் மனதில் வேதனையை யுண்டாக்கிக்கொண் டிருந்தன.

ஒருவர் செய்யும் அக்கிரமங்களுக்கும் பாபச் செயல் களுக்கும் அவர்களுடைய மனச் சாட்சியே அவர்கள் மன தைச் சுட்டுக்கொண் டிருக்கும் என்பது அனுபவமான உண்மை. குற்றமற்றதும் கெட்ட சிந்தனைகளை நீக்கியதும் கடவுள் பக்தி யுடையதுமான களங்கமற்றவர்கள் உள் ளமே எப்போதும் சந்தோஷத்தையே யுடையதாயிருக்கும். அதனிடத்தில் அச்சமென்பதே யிராது. திருஷ்டாந்த மாய்க் களவு செய்திருப்பவன் ஒரு போலீஸ்காரன் வரு வதைக் கண்டதே திகிலடைகிறான். சூக்கம அறிவோடு பார்ப்போர் அவன் முகக்குறியால் உடனே அவன் மன நிலைமையை யறிந்துகொள்ளலாகும். ஒரு துப்பறியும் உத்தி யோகஸ்தன் சில வருடங்கட்குமுன் அத்தகைய சம்பவத் தாலேயே ஊரில் நடந்திருந்த ஒரு பெரிய களவைக் கண்டு பிடித்தான்.

மேற்கண்ட காரணத்தால் தெய்வயானைக்கு நித்திரை வராததோடு அவள் மனதில் ஒரு காரணமும் தோன்றா மலே ஒருவித இலச்சை யுண்டாயிற்று. அன்று தன் பெரிய தந்தை அவருடைய துஷ்ட வழக்கம்போல் யாரையோ இரகசியமாய் மாளிகையிற் சந்திக்க ஏற்பாடு செய்திருக்கிறாரென்று அவள் அறிவாள். ஆனால் அது யாரை யென்பது முதலிய விவரமொன்றும் அவளுக்குத் தெரியாது. இது ஒருபக்கம் அவள் மனதின் நிம்மதியைக் கெடுத்துக்கொண் டிருந்தது.

186548

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 3-பாகம் விலை ரூபா 6

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் அவரை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி பின்னை, மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

“ஆனந்தபோதினி”

ஓர் இனிய மாகாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானுபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மை யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபா தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம்			தினகரசுந்தரி	1	0
3-பாகமும் ...	6	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	ரத்தினுபாய் ...	1	12
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம்2பாகம் ...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	10
ஆனந்தஸிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனும்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.